விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 24 சனிக்கிழமை (10.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மீளக் குடியமர்த்தாத இடங்களில் பொதுமக்களின் சடலங்கள்?

## அச்சம் வெளியிடுகிறார் ஐரோ. எம்.பி

2009இல் இறுதிப் போர் இடம்பெற்ற பகுதிகளில், இதுவரை மக்கள் சென்றுவர அனுமதிக்கப்படாத இடங்களில் பல பொதுமக்களது சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தான் நம்புவதாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சர்ட் ஹொவிட் கூறியுள்ளார்.

அந்தப் பகுதிகளுக்கு முழுமையாக சென்றுவர வசதி செய்யப்பட்டாக வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல்களில் விருப்பு வாக்குமுறை நீக்கம்!

### விரைவில் சட்டம் வெளியாகும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் விருப்பு வாக்கு முறைமை இல்லாதொழிக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆரம்ப கட்ட பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளையும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான புதிய சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்ட வருகிறது. பிராந்திய அபிவிருத்தி பணிகளுக்காக பாராளுமன்ற உறுப்பினர்களை விடவும் சில உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அபிவிருத்திப் பணிகளை சீரியமுறையில் மேற்கொள் (20ஆம் பக்கம் பார்க்க)

## 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருள் சிலைகள் மீட்பு



### பேரா. புஸ்பரட்ணம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தை அண்டிய பகுதியிலிருந்து இற்றைக்கு 2 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருள் சின்னங்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் (20ஆம் பக்கம் பார்க்க)

## சுமார் 36 ஆயிரம் பேரையே மீள்குடியேற்ற வேண்டும்!

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் பத்தாயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 442 பேர் இன்னமும் மீள் குடியேற்றப்பட வேண்டியுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பின்போது யாழில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்களின் விபரத்தை அரச அதிபர் வெளியிட்டுள்ளார்.

டிசம்பர் 5 ஆம் திகதி நடத்தப்பட்ட கணக்கெடுப்பிலேயே மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையுடையவர்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 8 ஆயிரத்து 459 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 21 பேர் உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டில் வசித்து வருவதாகவும் (20ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகள் மூவருக்கு பிடியாணை

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட பிக்குகள் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இதன்போது, தமது கடமையைச் செய்ய விடாது தடுத்தாக பொலிஸார் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு வராத மூன்று பிக்குமாருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார். சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த 12 பிக்குகள் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். பின்னர் இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்டுள்ள புலிகளின் விபரங்களை வெளியிட வேண்டும்

### சுரேஷ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளது போராளிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நீதி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தின் போது கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களான பாலகுமார் மற்றும் எழிலன் ஆகியோர் இறுதிக்கட்டப் போரின்போது ஒரு கத்தோலிக்க மதகுருவுடன் சென்று படைத் தரப்பினரிடம் சரணடைந்ததாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது குறிப்பிட்ட கத்தோலிக்க



மதகுருவின் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் டெங்குநோய் அபாயம்

யாழ்ப்பாணத்தில் இந்த வருடத்தின் கடந்த மாதங்களில் குறைந்தளவாக உறுதி செய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மையான மாதங்களில் அதிகரிப்புப் போக்கை காட்டுவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆவணி-24, புரட்டாதி-14, ஐப்பசி-04, கார்த்திகை-27 என்ற அளவில் இவ் எண்ணிக்கை காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

தற்போது ஆரம்பித்திருக்கும் பருவபெயர்ச்சி மழைக் காலத்துடன் டெங்கு நோய் மீண்டும் பரவுவதற்கான ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த மாதங்களில் டெங்கு நோய்த் தாக்கம் குறைந்தளவாக-காணப்பட்டமையால் மக்கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிலை சற்றே குறைவடைந்து காணப்படுவதால் வீடுகள், அலுவலகங்கள், கோயில்கள், வேலைத் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அபிவிருத்திக்கு கைகொடுக்கும் சீன அரசு

### அந்நாட்டு பத்திரிகை புகழாரம்

சீனப் புள்ளிவிபரங்களின்படி, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக செயற்பாட்டுத் திட்டங்களானது 2010 இல் 2.1 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இவ்வாறு சீன நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதன் செய்தியாளர் எழுதிய செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

சீனா, இலங்கை ஆகிய இரு நாடுகளும் கடந்த பல ஆண்டுகளாக ஆரோக்கியமான, உறுதித்தன்மை வாய்ந்த உறவைப் பேணி வருவதுடன் மிக ஆழமாக பல்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களையும் தமக்குள் பரிமாறி வருகின்றன. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய பரஸ்பர பொருளாதார வர்த்தக (19ஆம் பக்கம் பார்க்க)

## வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி, கச்சேரி பாடசாலைக்கு அருகாமையில் பாதுகாப்பானசூழலில் அறை/குளியலறை/தனிவழிப்பாதை/விறாந்தையுடன்வாடகைக்கு உண்டு. தாய், மகள் OR வேலை பார்க்கும் பெண்கள் விரும்பத்தக்கது.

T.P-0750828308

(6925)


## எதிர் ஒளி நிகழ்வு

சிதைவுறும் தமிழர் பண்பாட்டை கலைத் துறையினால் பேணி பாதுகாக்க முடியுமா? என்ற தொனிப் பொருளில் எதிர் ஒளி 2011 என்ற நிகழ்வு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு (விகடகவி) தலைமையில் இன்று மாலை 5 மணி தொடக்கம் 6.30 வரை நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள நேசன்பொப்லர்ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் இல் நடைபெறவுள்ளது. இதில் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (எ)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை



(ஓய்வுபெற்ற பிரதம தாதி அரசினர் ஆதார வைத்தியசாலை)

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு காலமானார். அன்னார் மருதங்கேணியைச் சேர்ந்த அமரர்கள் கந்தையா தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கடற்றொழில் பரிசோதகர்)யின் அன்பு மனைவியும் தர்மசீலன் (பெல்ஜியம்) தர்சினி (அமெரிக்கா) தர்மரூபி (ஜேர்மனி) தர்ஜனன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சுதர்சினி (பெல்ஜியம்) தமிழ்ச்செல்வன் (அமெரிக்கா) சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிகிதா, அபினாஸ் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு, புலோலி
தொலைபேசி :- 021 226 3596

தகவல் :
குடும்பத்தினர்

(சி-5147)

# உலக சின்மயா மிஷன் தலைவர் சுவாமி தேஜோமயானந்தர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் திங்கட்கிழமை உலக சின்மயா மிஷன் தலைவர் பூஜ்யகுருஜி சுவாமிதேஜோமயானந்தர் முதன் முறையாக யாழ் மண்ணுக்கு விஜயம் செய்கின்றார்.

பூஜ்யகுருதேவர் சுவாமி சின்மயானந்தரால் 1951ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சின்மயா மிஷனானது தற்போது உலகளாவிய ரீதியில் பிரதானமாக ஆன்மிகப் பணியையும் மற்றும் கல்வி, மருத்துவம், சமூகசேவைப் பணிகளையும் ஆற்றிவருகின்றது.

30க்கும் மேற்பட்ட நாடுகளில் 300க்கும் மேற்பட்ட துறவிகளின் மூலமாகவும், அடியவர்கள் மூலமாகவும் இந்துப் பணி நடைபெறுகின்றது. 1993ம் ஆண்டு பூஜ்ய குருதேவரின் மகாசமாதியின்பின்னர் உலகசின்மயா மிஷன் தலைமைப் பொறுப்பை ஏற்ற சுவாமி தேஜோமயானந்தர் தற்போது உலகெங்கிலும் இடம் பெறுகின்ற பணிகளை மிகச்சிறப்பாக ஆற்றி வருகிறார். அவருடைய யாழ்ப்பாண விஜயமானது எம்மக்கள் மத்தியிலே ஆன்மிக விழிப்புணர்வை ஊக்குவதற்கான விஜயமாக அமையவிருக்கின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 13ம் திகதி,யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், மாலை 4.30 மணிக்கு அமைதியற்ற உலகில் அமைதி எனும் தலைப்பில் ஆன்மிக சொற்பொழிவு ஆற்ற இருக்கின்றார். இதில் பொதுமக்களை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)


## காணி தேவை

01) A9 வீதியில் (247 Km-261Km) கிளிநொச்சியில் தேவை.
02) A9 வீதியில் (220Km-224 Km) மாங்குளத்தில் தேவை.
1 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்புகளுக்கு :- 0779155756

(6942)


## இடமாற்றம் பெறும் (2012) ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வெளிமாவட்ட மற்றும் தீவக வலயங்களில் பணிபுரிந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறுவதற்கென விண்ணப்பித்து இதுவரை இடமாற்றமோ, இடமாற்ற கடிதமோ கிடைக்கப் பெறாத சகல ஆசிரியர்களுக்குமான அவசர ஒன்றுகூடலுக்கான அழைப்பு.

திகதி : 12.12.2011 (திங்கட்கிழமை) நேரம் : காலை 9.00 மணி இடம் : யாழ்.வலயம் முன்பாக (முத்திரைச்சந்தி)

-ஏற்பாட்டாளர்கள்-

(சி-5149)


## சிறீரங்கம் ரெக்ஸ்ரைல்ஸ்

நத்தார் பண்டிகையை முன்னிட்டும், இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு தனியான காட்சியறையில் புதிய மொடல் றெடிமெட் சல்வார் மற்றும் சுடிதார் துணி வகைகளையும் 13 நாட்களுக்கு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். மேலும் அனைத்து தரப்பினருக்குமான நியூமொடல் ஆடை வகைகளையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.



(C-5137)

காலம் - 12 முதல் 25 வரை



சிறீரங்கம் ரெக்ஸ்ரைல்ஸ்
வதிரி வீதி, உடுப்பிட்டி.
தொலைபேசி: 0213737455




# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தம்பிராஜா (ஐயாத்துரை)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தம்பிராஜா நேற்று முன்தினம் (08.12.2011) அன்று வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக்கணவரும், பவானி, கிருஷ்ணபவன் (கிரி-லண்டன்), தர்ஷாயினி, நிமல்ராஜ் (நிமல்), நிரோஜினி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற தங்கரத்தினம், மகேந்திராதேவி, கெங்காதேவி, சிவனேசன் (இத்தாலி), கலைவாணி (ஜேர்மனி), ரதிவாணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணர், வீரசிங்கம், காலஞ்சென்ற வைரவநாதன் (தருமு), பொன்மலர் (இத்தாலி), காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், கணேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருந்தவராஜா, சுதாகரன், சுதர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், லதுசன், விதுஷன், மிசானியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி, சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.
021 7902382

தகவல் :-
குடும்பத்தினர்.

(6944)

## இன்று ஒரு தகவல்

# விடுதலை

ஒரு சுதந்திரப் போராட்ட வீரன் ஒரு காட்டு வழியாகத் தனியாக சென்று கொண்டிருந்தான். மாலை நேரமாகி இருள் சூழ்ந்து கொண்டது. செய்வதறியாது யோசித்துக் கொண்டிருந்தான்.

அங்கே ஒரு சத்திரம் தெரிந்தது.

சரி! இன்று இரவு இங்கேயே தங்கியிருந்துவிட்டு காலையில் புறப்படலாம் என்று முடிவு செய்தான்.

நேராக சத்திரத்தினுள் நுழைந்தான். அங்கேயே தங்கினான். அவனுக்கு நிம்மதியான தூக்கம் வரவில்லை. ஏதோ சத்தம்... உயரே பார்த்தான். அங்கே ஒரு கிளிக்கூண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

அந்தக் கூண்டுக்குள் ஒரு கிளி. அது அதற்குள் அடைபட்டுக்கொண்டிருந்தது, " சுதந்திரம், சுதந்திரம் | என்று கத்திக் கொண்டிருந்தது.

இவன் அதைப் பார்த்தவுடன் மனம் ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. இவனது மனம் பதைபதைக்கத் தொடங்கியது.

கிளியின் மனம் இப்போது என்ன பாடுபடும். விடுதலை பெறுவதில் அதற்கு எவ்வளவு ஆசை.

உடனே இவனுக்கு தான் சிறையிலே இருந்த நாட்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. அவனுக்குத் தெரியும் அடைபட்டிருக்கிறது எவ்வளவு கொடுமையான விடயம் என்பது.

அந்தக் கிளியின் நிலைமையும் அப்படித்தான் என்பதை நினைத்துப் பார்த்தான். மிகவும் உணர்ச்சி வசப்பட்டான். ஒரு முடிவுக்கு வந்தான்.

சரி... இந்தக் கூண்டுக் கிளிக்கு நாம் சுதந்திரம் வாங்கிக் கொடுப்போம். இந்தச் சத்திரத்து உரிமையாளருக்குத் தெரியாமலே கூண்டுக் கதவைத் திறந்து விடுவோம் என்று நினைத்துவிட்டு மெதுவாக எழுந்து அந்தக் கூண்டைத் திறந்து விட்டான்.

உள்ளேயே உட்கார்ந்து பழக்கப்பட்ட கிளி வெளியே வராமல் உள்ளே இருந்தது. அதை மெதுவாக வெளியே எடுத்து பறக்க விட்டுவிட்டு இவன் மறுபடியும் உள்ளேயே வந்து தூக்கத்தில் ஆழ்ந்தான்.

இப்போது நிம்மதியாகத் தூங்கினான். கிளிக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பெருமையால் தூக்கத்தை அணைத்துக் கொண்டான்.

பொழுது புலர்ந்தது. காலையிலே இந்த வீரன் நிம்மதியாகக் கண் விழித்துப் பார்க்கிறான்.

அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

மேலே தொங்கிக் கொண்டிருந்த கூண்டுக்குள் வெளியிலே கொண்டு போய்விட்ட கிளி மறுபடியும் உட்கார்ந்திருந்தது.

மீண்டும் சுதந்திரம்,... சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது.

இப்போதுதான் அவனுக்கு உண்மை தெளிவானது.

அந்த வார்த்தையின் அர்த்தம் தெரியாமலே அது கத்திக் கொண்டிருக்கிறது என்று.

ஏதோ பழக்கதோஷத்திலே அது அப்படி பேசிக் கொண்டிருக்கிறது... அவ்வளவுதான்.

எதற்கு இந்தக் கதை இங்கே கூறப்படுகிறது என்றால், இன்று அநேகமானவர்கள் இந்த வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கிளி மாதிரியேதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.தாதியர் கல்லூரியானது மக்களுக்கு அர்ப்பணிப்புடன் உன்னத சேவையாற்றுகிறது

## சத்திரசிகிச்சை நிபுணர் ஆர்.ரவிராஜ்

(யாழ்ப்பாணம்)

30 வருடகால போர்ச்சூழலிலும் தனது பணியினை இடைவிடாது போரினால் காயப்பட்ட மக்களுக்கு தமது உயிரை பணயம் வைத்து தாதியர்கள் சேவையாற்றியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்தாதிய பயிற்சி நெறிக்கு விரிவுரைகள் வழங்கிய விரிவுரையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.சென்.ஜோன் அம்புலன்ஸ் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் ஆர்.ரவிராஜ் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.தாதியக்கல்லூரியானது, மக்களுக்கு தம்மை அர்ப்பணித்து உன்னதமான சேவையாற்றி வருகின்றது. இக்கல்லூரியில் பயிற்சி பெற்ற வீட்டுத் தாதியர்களாகிய நீங்களும் சிறந்த பணியினை முன்னெடுத்துச் செல்வீர்கள் என நம்புகிறோம்.

வாழ்க்கையில் பணம் அவசியமில்லை என்று நான் கூறவில்லை. ஆனால், நாம் பணத்தையே குறிக்கோளாகக் கருதினால் சேவையாற்ற முடியாது.

உலகிலேயே தாதிய பணி உன்னதமான பணியாக பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனைப் பயன்படுத்தி சிறந்த சேவையாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர் றயுலாதேவி வல்லிபுரநாதன், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தின்பயிற்சிஇணைப்பாளர்திருமதிபியசீலி, யாழ். சென்ஜோன்ஸ் அம் புலன்ஸ்மாவட்டஉதவிஆணையாளர் சோ.ஈழநேசன், யாழ்.மாவட்ட சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் உதவி ஆணையாளர் செ.செல்வரஞ்சன், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (2-4)

# கண்காட்சியும்; வாழ்வாதார தொழிலுபகரணங்கள் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தினால் வாழ்வு எழுச்சியுடன் (திவிநெகும) இணைந்த சமுர்த்தி கண்காட்சி பூங்காவும் வாழ்வாதார தொழில் உபகரணங்கள் வழங்கலும் எனும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பரியோவான் கல்லூரியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பி.திலகசிறி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இலங்கை சமுர்த்தி அதிகாரசபை வாழ்வாதாரப்பிரிவு பணிப்பாளர் மா.நடேசராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ்.பரியோவான் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானபொன்ராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு கண்காட்சி மண்டபம் திறந்து வைத்தல், வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 120 | 70 |
| பச்சைமிளகாய் | 210 | 350 | 200 |
| தக்காளி | 140 | 160 | 150 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 40 | 20 |
| கோவா | 70 | 90 | 65 |
| கரட் | 80 | 160 | 90 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 90 | 60 |
| வாழைக்காய் | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 110 |
| லீக்ஸ் | 50 | 90 | -- |
| பீற்றூட் | -- | 70 | 50 |
| கறிமிளகாய் | 120 | 180 | 130 |
| முருங்கைக்காய் | -- | 300 | 100 |
| போஞ்சி | -- | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 40 |
| கீரை - 1 பிடி | 18 | 50 | 20 |
| தேசிக்காய் | 110 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

## இராசி பலன்

*10.12.2011*

*(கார்த்திகை 24, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு*

*பூரணை முன்னிரவு 8.42 மணிவரை*

*ரோகினி முன்னிரவு 7.26 மணிவரை*

*இராகுகாலம் 9.19 - 10.49மணிவரை*

*சுபநேரம் 3.19 - 4.49 மணிவரை*

*பூரணை விரதம், அமிர்தசித்தம்*

*சர்வாலய தீபம்(வீடுகளில் தீபம்)*

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள். காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். மனக் கிலேசம் அகல மாற்றினத்தவர் உறுதுணை புரிவர்.

**இடபம்** எந்த வேலையையும் நாளை என தள்ளிவைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** பயணத்தால் பலன் கிடைக்கும். நண்பர்கள் தொடர்பான சிலவேலைகளுக்காக அலைய நேரிடலாம். வெளியில் செல்லும் போது யாராவது வந்து உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள். ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரியும் நாள். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். கீர்த்தி அதிகரிக்கும்.

**சிங்கம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள். புதிய தொழில் தொடங்க தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். குறைந்தளவில் எதிர்பார்த்த இலாபம் ஒன்று பெரிய அளவில் இடம்பெறலாம்.

**கன்னி** காரிய வெற்றி ஏற்படும் நாள். தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வரவேண்டிய வரவுகள் எளிதில் வசூலாகலாம். பயணங்களால் பலன் உண்டு.

**துலாம்** வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள். பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழிலில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

**விருச்சிகம்** தொலைபேசி மூலம் அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம். வருமானம் திருப்தி தரும். வீட்டுப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். களஸ்திர நன்மை உண்டு.

**தனுசு** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள். இனிமையான அனுபவங்கள் ஏற்படும். மூத்தோரால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள். வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள். செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும். உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரும். வசதிகளைப் பெருக்கி கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள். உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நிகழலாம். தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். வாகன சுகம் உண்டு.

**மீனம்** வெற்றிச் செய்திகள் விடு வந்து சேரலாம். பணப் புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்படலாம். உடன் பிறப்புகள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

# கிளி. மற்றும் முல்லை. இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்

## இளைஞர் சேவை மன்ற வடமாகாண பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை அதிகளவில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என இளைஞர் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.விமலேஸ்வரி தெரிவித்துள்ளார்.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தொழில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு கடன் யோசனைத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இந்த தொழில் முயற்சிகள் வட மாகாணத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தகைய தொழில் முயற்சி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் உள்ள இளைஞர் யுவதிகள் போரினால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் உள்ளனர்.

அவர்களுக்கு இத்தகைய சுய தொழில் வாய்ப்புக்களை அதிகளவில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமானது.

இதன்மூலம் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள முடியும்.

கடந்த கால யுத்த சூழல் அவர்களிடையே இவ்வாறான சுயதொழில்களை செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த தடையாக இருந்துள்ளது. மேலும் இலங்கையில் யாழ். மாவட்டம் கூட்டுறவுத்துறையில் முன்னோடியாக திகழ்ந்து வருகின்றது.

அத்தோடு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடன் உதவிகளைப் பெற்று சுய தொழில் முயற்சிகளில் அதிகமானவர்கள் ஈடுபட்டு வருகின்னர்.

இள்ளஞர் யுவதிகள் வங்கிகளில் கடன் உதவிகளைப் பெற்று சுய தொழிலை செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். அந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

வங்கிகளில் கடன் உதவிகளைப் பெறுவதனால் அதிகளவில் வட்டி கொடுக்க வேண்டும் என்று அச்சப்படுகின்றனர்.

சிலர் வங்கிகளில் கடன் உதவிகளைப் பெற்று விட்டு அரசாங்கம் எப்போது அந்த கடன் உதவிகளைத்தள்ளுபடி செய்யும் என எதிர்பார்த்து இருப்பார்கள்.

இத்தகைய மனநிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். இளைஞர் யுவதிகள் சுய தொழில்களை செய்வதற்கு முன் வர வேண்டும். இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத் தையும் எமது மாவட்டத்தையும் முன்னேற்ற முடியும்.

எத்தனை பேர் சுயதொழில் மூலம் முன்னேற்றம் கண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தக் கருத்தரங்கில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைப் பணிப்பாளர் சரத் ஆனந்த, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் ஆர்.சிவானந்தன், இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி. ஈஸ்வரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (2-6)

## வாழ்வக நிறுவுநரின் நினைவாலய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக இல்லத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவாலயத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 மணி முதல் 10.20 மணி வரையான சுபநேரத்தில் கலாநிதி ஆறு திருமுருகனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நினைவாலயம் அமைப்பதற்கு நோர்வே சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் உபகுழுவான நோர்வே இந்து இளைஞர் மன்றம் நிதியுதவியினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2)

## கழிவு பொருட்களால் நிறைந்துள்ள வீதி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் இருந்து காக்கைதீவு ஊடாக செல்லும் அராலி வரையிலான வீதியின் இரு மருங்கும் கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றன.

மேற்குறித்த வீதியின் இரு மருங்கும் கழிவுப் பொருட்கள் விசமிகளால் கொட்டப்படுகின்றன.

இவ்வீதியின் பிளாஸ்டிக் பொருட்கள் பொலித்தீன் பைகள் மற்றும் வீட்டுக்கழிவுப் பொருட்கள், இறந்த விலங்குகளின் உடல்கள், இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் கழிவுப் பொருட்கள் என்பன இரு மருங்கும் காணப்படுகின்றன.

இதனால் அவ் வீதியால் செல்கின்ற பாடசாலை மாணவர்கள், பயணிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

கட்டக்காலி நாய்களினால் மேற்படி கழிவுப் பொருட்கள் வீதிக்குள் இழுத்து விடப்பட்டு பாதை எங்கும் சிதறிக் காணப்படுகின்றன.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-15)

### யாழ்.செய்திகள்

## முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா

(இணுவில்)

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மருதடி முருகன் கோவில் அருகாமையிலுள்ள அருணகிரி நாதர் கலையரங்கில் முன்பள்ளி முகாமைத்துவ குழுத் தலைவர் க.தர்மநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன், சிறப்பு விருந்தினராக கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் மற்றும் கோண்டாவில் வடமேற்கு கிராம உத்தியோகத்தர் க.முருகையா, கௌரவ விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக கட்சி நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் அ. இரவீந்தரதாசன் மற்றும் நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி மாலதி விவேகானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2)

## ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமிகளின் குரு பூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மட சிவகுருநாத பீடத்தின் வேதாந்த மடத்தின் 6 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு கந்தர்மட சிவகுருநாத குருபீடவேதாந்த மடத்தில் 8 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாகர சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுவாமிகளின் சமாதிக்கு விசேட அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து தாவடியூர் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளது. (2-3)

## தாயகம் சஞ்சிகையின் வெளியீடும் விமர்சனமும்

(யாழ்ப்பாணம்)

தாயகம் கலை இலக்கிய சஞ்சிகை வெளியீடும் விமர்சனமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் தேசிய கலை இலக்கிய பேரவையின் வட பிரதேச செயலாளர் த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விமர்சன உரையினை வி.பி சிவநாதன், தொடர்பாளர் ஊடக கல்வி ஆசிரியர் திருமதி சுதாயினி றுசாங்கன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையை தாயகம் ஆசிரியர் க. தணிகாசலம் நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வில் கலை இலக்கிய சமூக விஞ்ஞான, அறிவியல், பண்பாட்டு ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3)








வீட்டுத் தாதிய பயிற்சி நெறிக்கு விரிவுரைகள் வழங்கிய விரிவுரையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ். சென்ஜோன்ஸ் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தின் இணைப்பாளர் திருமதி பியசீலி மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் ஆர்.ரவிராஜ் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட வீட்டுத்தாதிய பயிற்சி பெற்றவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன்)



இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில், தொழிற் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு கடன்யோசனைத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் சரத் ஆனந்த, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் ஆர். சிவானந்தன், இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ். விமலேஸ்வரி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்கள்)

# கலாபூசணம் விருது பெறும் தமிழ் கலைஞர்கள்

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும் கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் கலாபூஷணம் என்னும் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டிற்கான கலாபூஷண விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொழும்பு 07 ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ. சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கான ஏற்பாடுகளை கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க அவர்களின் தலைமையில் இவ் விழா நடைபெறவுள்ளது. பூத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம். கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன அவர்கள் இவ் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நியமித்த மதிப்பீட்டுக்குழுவினர் மூலம் இவ்வாண்டு விருது பெறும் தமிழ்கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு மொத்தமாக 50 தமிழ் கலைஞர்கள் கலாபூஷணம் விருது பெறுகின்றனர். இவ்விருது பெறும் கலைஞர்களுக்கு திணைக்களம் மூலம் அழைப்பிதழ் மற்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களை பெற விரும்பும் கலைஞர்கள் 0112552641 அல்லது 0112 552642 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்திநாவுக்கரசன் கேட்டுள்ளார்.

விருது பெறுவோரது விபரம் வருமாறு,

ச.செல்வநாயகம் (இசைத்துறை, திருகோணமலை), த.சிவலிங்கம் (ஓவிய, நாடகத்துறை, யாழ்ப்பாணம்), செ.நடராசா (ஊடகத்துறை, யாழ்ப்பாணம்), சி.நாகராசா (இசைத்துறை, யாழ்ப்பாணம்), பொ. தவநாயகம் (கவிதை, கட்டுரை, நாடகம், மட்டக்களப்பு), இ.பீதாம்பரம் (நாடகத்துறை, யாழ்ப்பாணம்), த.துரைசிங்கம் (எழுத்துத்துறை, யாழ்ப்பாணம்), சு.யேசுதாசன் (நாடகத்துறை, யாழ்ப்பாணம்), ம.சு. செல்வராஜா (இசைத்துறை, கொழும்பு), சா.முத்துக்குமாரன் (சமய, இலக்கிய, நாடகத்துறை, மட்டக்களப்பு), வே. இளையகுட்டி (இலக்கியத்துறை, யாழ்ப்பாணம்), த.சிவசுப்பிரமணியம் (இசைத்துறை, யாழ்ப்பாணம்), கு. சின்னையா (ஊடகத்துறை, திருகோணமலை), பொ. சேதுபதி (நாடகத்துறை, முல்லைத்தீவு), தி. ராஜகோபால் (எழுத்துத்துறை, நுவரெலியா), அ.பா. பொன்னழகன் (எழுத்துத்துறை, மாத்தளை), ம.தவமணி (இலக்கியத்துறை, முல்லைத்தீவு), பி.திருநாவுக்கரசு (இசைத்துறை, கண்டி), க.வைகுந்தம் (இலக்கியத்துறை, யாழ்ப்பாணம்), வே. சண்முகநாதன் (இலக்கியம், எழுத்துத்துறை, அம்பாறை), இ.அரசகேசரி (நாட்டுக்கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, பக்திப் பாடல்கள், மட்டக்களப்பு), மூ. தேவதாசன் (நாடகத்துறை, யாழ்ப்பாணம்), கு.விஜயன் (எழுத்துத்துறை, கொழும்பு), வ.செல்லத்துரை (கலைத்துறை, கிளிநொச்சி), செ. சோமசேகரம்பிள்ளை (இசைத்துறை, கிளிநொச்சி), சி.வி.பி. மாணிக்கம் (கவிதைத்துறை, அம்பாறை), பா. நடராஜா (இசைத்துறை, யாழ்ப்பாணம்), கி.டேவிட் (இலக்கியத்துறை, யாழ்ப்பாணம்), பொ. இராசகுலசிங்கம் (ஓவியத்துறை, யாழ்ப்பாணம்), பொ. தில்லைநாதன் (கலைத்துறை, கிளிநொச்சி), நீ. முத்தையா (நாடகத்துறை, கொழும்பு), இ.பத்மநாதன் (இசைத்துறை, யாழ்ப்பாணம்), இ. கணபதிப்பிள்ளை (இசைத்துறை, கொழும்பு), மா. நாராயணசாமி (இசைத்துறை, யாழ்ப்பாணம்), அ.செபமாலை (நடிப்புத்துறை, மன்னார்), கா. வீரக்குட்டி (எழுத்துத்துறை, அம்பாறை), சி.இராமநாதன் (இலக்கியத்துறை, அம்பாறை), சி. மகாலிங்கம் (எழுத்துத்துறை, யாழ்ப்பாணம்), இ.பஞ்சலிங்கம் (நாடகத்துறை, யாழ்ப்பாணம்), ப.பரராஜசிங்கம் (கலைத்துறை, யாழ்ப்பாணம்), சு. சிவராசா (இலக்கியத்துறை, யாழ்ப்பாணம்), வி.சிவஞானசேகரம் (இசைத்துறை, யாழ்ப்பாணம்), கி. ஸ்ரீஸ்கந்தராசா (கலைத்துறை, புத்தளம்), இ.கேதீஸ்வரன் (இசைத்துறை, யாழ்ப்பாணம்), இ.ஸ்ரீதரன் (இசைத்துறை, யாழ்ப்பாணம்), மு.சண்முகநாதன் (இசைத்துறை , வவுனியா), க.பிரதீபன் (நடிப்புத்துறை, கொழும்பு), சி.சுந்தரலிங்கம் (எழுத்துத்துறை , திருகோணமலை), கலாநிதி மு.நவரெத்தினம் (கலைத்துறை, யாழ்ப்பாணம்), க.கனகேஸ்வரன் (இசைத்துறை, வவுனியா). (2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் மு.மகேந்திரன் கேட்டுக் கொள்கிறார்.

(அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

2 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

ஆயிரத்து 720 மில்லி கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 15 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (2-3-4)

3 ஆயிரத்து 2 மில்லிக்கிராம் கஞ்சாவைதன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (2-3-4)

நுளம்பு பெருகுவதற்கு ஏற்றமுறையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 10 நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு 10 பேருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (2-3)

# கச்சதீவில் மீன்பிடித்தடை மண்டலத்தை ஏற்படுத்த கோரிய மனு மீளப்பெறப்பட்டது

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்தடை மண்டலத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை இந்திய கரையோர பாதுகாப்பு படையினர் மீளப் பெற்றுள்ளனர். தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு முப்படை பாதுகாப்பு வழங்கக் கோரி உயர்நீதிமன்றக் கிளையில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை விசாரணை செய்த நீதிபதிகள் குழாம் இந்திய கடற்படையும் கரையோர பாதுகாப்பு படையும் இணைந்து மீனவர்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த உத்தரவை இரத்துச் செய்யக் கோரி மனுவொன்றினை தாக்கல் செய்த இந்திய கரையோர பாதுகாப்புப் படையினர் குஜராத் மாநிலத்தில் இந்திய பாகிஸ்தான் கடற்பிரதேசத்தில் மீன்பிடித் தடை மண்டலம் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் போன்று இந்திய- இலங்கை கடற்பரப்பிலும் மீன்பிடித்தடை மண்டலம் ஏற்படுத்தப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

கரையோர பாதுகாப்பு படையினரின் இந்தப் பரிந்துரைக்கு மீனவர்களும் தமிழக அரசியல் கட்சியினரும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்ததாக சன் தொலைக்காட்சி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சர்ச்சைக்குரிய பகுதியில் மீன்பிடித் தடை மண்டலத்தை ஏற்படுத்தும் திட்டத்தை மீளப்பெறுமாறு இந்திய மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியிருந்தது. இந்நிலையில் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு வந்த பொழுது சர்ச்சைக்குரிய பகுதியை திரும்பப் பெறப்போவதாக கரையோர பாதுகாப்பு படையினர் அறிவித்துள்ளனர்.

கரையோர பாதுகாப்பு படையினரின் இந்தத் தீர்மானத்தை தமிழக மீனவர்கள் வரவேற்றுள்ளதாக சன் தொலைக்காட்சி செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ளப்போவதாக இராமேஸ்வர மீனவர்கள் அறிவித்துள்ளனர். இந்நிலையில் மீனவர்களுக்கான வழக்கை நடத்தவும் அதற்கான செலவை ஏற்கவும் தமிழக அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. (2)

# சிறையிலுள்ள தமிழக மீனவர்களின் வழக்கு செலவினை தமிழக அரசு ஏற்கும்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் வழக்குச் செலவுகளை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில் மீனவர்களை விடுவிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் இதனை அறிவித்தார். இதனையடுத்து தங்கச்சி மடத்தைச் சேர்ந்த எமர்சன், அக்ஸ்டஸ், லேங்க்லெட், பிரசாத் மற்றும் வில்சன் ஆகிய 5 மீனவர்களையும் விடுவிக்க அப்பாவி மீனவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி 5 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். கடந்த 5 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் மீனவர்கள் ஆஜர் படுத்தப்பட்டனர். இந்த வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி மேல் விசாரணைக்காக தள்ளி வைக்கப்பட்டுள்ளது. (2)

# வடகிழக்கில் இறையாண்மை கொண்ட பண்டைய இனம்-தமிழினம்

## ஜெயானந்தமூர்த்தி தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் இனம் எவரிடமும் கையேந்தியோ அல்லது சிங்களவர் ஏற்றுக் கொள்ளும் தீர்வை பெற்றுக்கொள்ளவோ வேண்டிய அவசியம் இல்லை. தமிழினம் தனித்துவமான இனம். வடக்கை தாயகமாகக் கொண்ட இறைமையுள்ள பண்டைய இனம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தாமூர்த்தி தெரிவித்துள்ளார்.**



அண்மையில் இலங்கையில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்து தொர்பாகவே ஜெயானந்தமூர்த்தி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர்கள் சிங்களவர்கள் விரும்பும் தீர்வை பெற்றுக் கொள்வதாயின் அதை அரை நூற்றாண்டுக்கு முன்பே பெற்றிருக்க முடியும். அது எமது நோக்கமல்ல. தனி நாடே எமது இனத்திற்கான ஒரே தீர்வு. அதற்காகவே இன்று நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளும் 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களும் தமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளனர். அதன் வலி எமது இனத்துக்கே தெரியும். அதைவிடுத்து தமது அரசியல் இலாபத்திற்காக தனித்துவமான இனத்தை கொச்சப்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கையில் வடக்கு கிழக்கு அநுராதபுரம், கண்டி உட்பட பெரும்பாலான பகுதிகளை பண்டைக்காலம் தொட்டு தமிழர்களே ஆட்சி செய்து வந்தனர். அதிலும் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம். ஆனால், எமது தாயகம் பெரும்பான்மை இனத்தினால் சட்டத்திற்கு முரணாக பறிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது.

எனவே, தமிழர்களை தமிழர்களே ஆளக் கூடிய தனிநாட்டை கோரும் உரிமை தமிழர்களுக்கு உண்டு. இந்த வரலாற்று உண்மைகளை மறந்து விட்டு இன்று தமிழினம் சிறுபான்மை இனம் சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வையே தமிழர்கள் பெறவேண்டும் என்றெல்லாம் கருத்து தெரிவிப்பது தமிழினத்தைத் புண்படுத்தும் அதே வேளை சிறுமைப்படுத்தும் செயலாகவும் உள்ளது.

இலங்கையில் நடைபெற்றது ஒரு இனத்தின் சுதந்திரப்போராட்டமே தவிர பயங்கரவாத பிரச்சினை இல்லை என்பதையும் அவருக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எந்தவொரு அரசின் சுதந்திரப் போராட்டமும் தோற்றதில்லை .சில பின்னடைவுகளை சந்தித்தாலும் இறுதியில் அப்போராட்டம் வெற்றி பெறுவதே வரலாறு. அது போன்றே எமது சுதந்திர போராட்டமான தமிழீழ போராட்டமும் இன்று சில பின்னடைவுகளை சந்தித்து தற்காலிகமாக மௌனித்திருந்தாலும் அது தனது இலக்கை நோக்கி தொடரவே செய்யும் என்பதையும் அமைச்சருக்கு நினை வூட்ட விரும்புகின்றேன்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் மாத்திரமல்ல தமிழ் தேசிய கூட்டமப்பினரும் ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வை பெற்றுக் கொள்ளவே தாம் விரும்புவதாக தெரிவித்துள்ளனர். இக்கருத்தை கூட்டமைப்பின் ஏனைய சக பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்கள் தனியான தமிழீழத்திற்காகவே தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள் என்பதை இவர்கள் மறந்து விடக்கூடாது. அது தமிழர்களின் இலட்சிய அவா. அந்த இலட்சியத்தைக் குழிதோண்டிப் புதைத்து அதன் மேல்நடக்க முற்பட்டால் அதற்கான தீர்ப்பை தமிழ் மக்கள் வழங்கியே தீர்வார்கள் என்றார். (2)

## பாராளுமன்றத்தை பார்வையிடும் முன்னாள் போராளிகள்

(கொழும்பு)

புனர்வாழ்வுஅளிக்கப்பட்டு வருகின்ற முன்னாள் புலிப் போராளிகள் 105 பேர் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சினால் பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அமைச்சு மீதான குழுநிலை விவாதம் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் பாராளுமன்ற அமர்வுகளைப் பார்வையிடுவதற்காக இவர்கள் பாராளுமன்ற கலரிக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (2)

## தொடர்மாடியை அண்மித்த பகுதிகளில் பெருகி வரும் டெங்கு நுளம்புகள்

(கொழும்பு)

கொழும்பு மாநகரிலுள்ள தொடர்மாடி வீடுகளை அண்மித்த பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரி வித்துள்ளது.

இதன் காரணமாக தொடர்மாடி வீடுகளை அண்மித்த பகுதிகளில் சுத்திரிகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான விசேட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த சுத்திகரிப்பு பணிகளில் சுமார் 300 பேர் அடங்கிய குழுவொன்றை ஈடுபடுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தொடர்மாடி வீடுகளை அண்மித்த பகுதிகளில் இந்த வருடம் 50 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் கூறினார். (2)

# அருட்சகோதரியின் கைது குறித்து மன்னிப்பு கோரியது அரசாங்கம்

இலங்கையில் மொரட்டுவை ராவத் தாவத்தை பிரதேசத்தில் கிறிஸ்தவ சிறுவர் இல்லம் ஒன்றில் பொலிஸார் சோதனை நடத்தியமை மற்றும் அருட்சகோதரி மேரி எலிஸாவை கைது செய்தமை என்பவற்றுக்கு அரசாங்கம் மன்னிப்பு கோரியுள்ளது.

இலங்கையில் அமைச்சரவை மன்னிப்பு கோரும் தீர்மானத்தை மேற்கொண்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறுவர் இல்லத்தில் இருந்து சிறுவர்கள் விற்பனை செய்யப்படுவதாக கூறி பொலிஸார் அத்னை இரண்டு வாரங்களுக்கு முன்னர் முற்றுகையிட்டனர்.

அத்துடன் அந்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளரான இந்திய அருட்சகோதரி மேரி எலிஸாவையும் அவர்கள் கைது செய்தனர். இந்த நிலையில் இந்த சம்பவத்துக்கு இலங்கையின் கத்தோலிக்க சபையும் இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகமும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. அரசாங்கத்தின் கிறிஸ்மஸ் தொடர்பான அனைத்து நிகழ்வையும் புறக்கணிக்கப்போவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் சிறுவர் இல்லம் முற்றுகையும் சகோதரியின் கைதும் மிகவும் உணர்வுமிக்க சம்பவம் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை இலங்கை கத்தோலிக்க சபை வரவேற்றுள்ளது இலங்கைப் பேராயரின் பேச்சாளர் அருட்தந்தை பெனடிக் ஜோசப் இது தொடர்பில் கருத்துரைக்கையில், இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வரவேற்பதாக தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸார் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள சகோதரி எலிஸா எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று ஏற்கனவே நீதிமன்றம் உத்தர விட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# மனித உரிமை மீறப்படுவதென்ற போலி பிரசாரத்துக்கு கண்டனம்

## பிரதமர் டி.எம்.ஜயரட்ன

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வரும் சிலரின் நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டியவை என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


தற்போதைய அரசாங்கத்தின் அளவிற்கு எந்தவொரு அரசாங்கமும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை எனவும் 30 ஆண்டுகளாக மக்களின் வாழும் உரிமை பறிக்கப்பட்டிருந்தது. அந்த மாபெரும் பிரச்சினைக்கு இந்த அரசாங்கமே முற்றுப் புள்ளி வைத்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எந்த இடத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சத்திலேயே மக்கள் வாழ்ந்து வந்ததாகவும் கொடூரமான பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி தலைமையிலான படையினர் மனிதாபிமான மீட்பு பணிகளை மேற்கொண்டனர் என தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் நகைப்புக்குரியது. படையினர் எல்லா நேரங்களிலும் ஒழுக்கத்துடன் செயற்பட்டனர் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் சிறிய நாடுகளின் மக்களது மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படுகின்றன. பலம் பொருந்திய நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டால் தவறில்லை. சிறிய நாடுகளின் தலைவர்கள் மேற்கொண்டால் அதுவே தவறு என்ற நிலை உருவாகியுள்ளது.

உலக நாடுகளின் இந்த இரட்டை நிலைப்பாட்டுக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





உரும்பிராய்வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உரும்பிராய் மக்கள் வங்கி முகாமையாளர் விஜயகுமார் உரையாற்றுவதனையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர் மற்றும் முன்பள்ளி சிறார்களையும் படங்களில் காணலாம்.

## எ.ரி.எம்.உடைத்து 50 இலட்சம் கொள்ளை

கந்தளாய் பிரதேசத்திலுள்ள அரச வங்கியொன்றில் தன்னியக்க டொலர் இயந்திரம் (எ.ரி.எம்) உடைக்கப்பட்டு அதிலிருந்து பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இயந்திரத்தின் பின்புறக் கதவை உடைத்த இனந்தெரியாதவர்கள் பணத்தை கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இயந்திரத்தில் சுமார் 50 இலட்சம் ரூபா இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. (2)



யாழ். வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாயர் ஆர். ரவீந்திரன் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்கில் காணலாம்.
(படங்கள்:- உ.சாளின்)

# வன்னியின் இந்திய வம்சாவளியினருக்கு காணி உறுதி வழங்கப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி

(கொழும்பு)

வன்னியில் குடியேறிய இந்திய வம்சாவளியினருக்கு அவர்கள் விவசாயம் மற்றும் குடியிருக்கும் நிலங்களுக்கு பல்லாண்டு காலம் காணி உறுதி வழங்காமல் புறக்கணிப்பது படுமோசமான மனித உரிமை மீறலாகும். இவ்விடயத்தில் விஷேட ஆணைக்குழு ஒன்றை நியமித்து அவர்கள் தற்போது பயன்படுத்தும் நிலங்களுக்கு உறுதி வழங்க துரித நடவடிக்கை எடுக்குமாறு மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவரும் நுவ ரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சம்பந்தப்பட்ட அமைச்சர் பஷில் ராஜபக்ஷவிடம் பாராளுமன்ற அலுவலகத்தில் நடத்திய பேச்சுவார்த்தையிலும் அதைத் தொடர்ந்து அவர் இது தொடர்பாக எழுதியுள்ள அவசர கடிதத்திலும் இந்த அவசர கோரிக்கையினை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

இந்நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது மலையக பெருந்தோட்டப் புறத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது பாதுகாப்பை நாடி வன்னி மாவட்டத்தின் வவுனியா, கிளிநொச்சி, கிழக்கு மாகாணம் போன்ற பிரதேசங்களுக்கு சென்று அங்கு பூர்வீகமாக வாழ்கின்றனர்.

அவர்களின் விவசாய காணி மற்றும் குடியிருப்பு நிலம் போன்றவற்றுக்கும் இன்னும் உறுதிப்பத்திரம் வழங்கப்படாது திட்டமிட்ட வகையில் பல்வேறு காரணங்களையும் காட்டி இழுத்தடிக்கப்பட்டு வருவது ஒரு கடும்போக்கு புறக்கணிப்பாகும்.

இங்கும் அவர்கள் நில உரிமையற்ற மக்கள் கூட்டமாக வாழ்ந்தனர். ஆனால், அவர்களின் நிலத்திற்கு தேவையான உறுதிப்பத்திரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்காமை ஏன் என்பது அவர்களின் வாக்குகளை பெற்று பலமிக்க அரசியல் சக்தியாக இருப்பவர்களும் மனிதாபிமான ரீதியில் கரிசனை காட்டாதமையும் புரியாத புதிராக உள்ளது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒரு ஆணைக்குழுவினை அமைத்து காணி கச்சேரி ஒன்றை நடத்தி இவர்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்குமாறு வேண்டுகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (2)

# ஓய்வுபெற்ற நீதவான்கள் சிலர் சட்டத்தை மீறி செயற்படுகின்றனர்

## நீதியமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

ஓய்வுபெற்ற நீதவான்கள் சிலர் சட்டத்தை மீறிச் செயற்பட்டு வருவதாக நீதிஅமைச்சு அறிவித்துள்ளது. ஓய்வுபெற்ற நீதவான்கள் சிலர் பெருமளவிலான அரச சொத்துக்களை சட்ட விரோதமான முறையில் பயன்படுத்தி வருவதாக நீதி அமைச்சின் செயலாளர் சுஹதத கம்லத் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்று சில ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் சில நீதவான்கள் பதவி வகித்த காலத்தில் வழங்கப்பட்ட அசையும் அசையா சொத்துக்களை தொடர்ச்சியாக பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சொத்துக்களை மீட்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

சொத்துக்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஓய்வுபெற்ற நீதவான்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார். (2)

# கழற்றப்பட்டு ஏற்றப்பட்ட மின்கம்பங்கள் அடுத்த தேர்தல் காலத்தில் நாட்டப்படுமா?

## கிளிநொச்சி தொடர்பில் ஸ்ரீதரன் எம்.பி.

(கொழும்பு)



பொய்களைக்கூறி வாக்கு கேட்பவர்கள் கூட்டமைப்பினர் இல்லை என்று தெரிவித்த கூட்டமைப்பு எம்.பி. ஸ்ரீதரன் கிளிநொச்சி மாவட்டத்தில் நாட்டப்பட்ட மின்கம்பங்கள் மீண்டும் கழற்றப்பட்டு ஏற்றப்பட்டு விட்டன. இதனை அடுத்த தேர்தலில் நாட்டுவீர்களா? என்று வினவினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் ஸ்ரீதரன் எம்.பி. உரையாற்றுகையில், கிளிநொச்சியில் நாட்டப்பட்ட மின்கம்பங்கள் கழற்றப்பட்டு விட்டன என்று சுட்டிக்காட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு தனதுரையில் பதிலளித்த குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சியில் நாட்டப்பட்ட மின்கம்பங்கள் மீண்டும் கழற்றப்படவில்லை. திருப்பி ஏற்றப்படவும் இல்லை. இந்த மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை கூறவும் முன்னேற்றங்களைப் பற்றி பேசவும் பொய்களைக் கூற வேண்டாம். மின்சாரம் வழங்குவதற்கான ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதமே மின்சாரம் வழங்க முடியாமைக்கான காரணமாகும் என்றார்.

இதனிடையே ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஸ்ரீதரன் எம்.பி. நான் பொய்களைக் கூறவில்லை. கிளிநொச்சியில் நாட்டப்பட்ட மின்கம்பங்கள் மீண்டும் கழற்றி ஏற்றப்பட்டு விட்டன. அவற்றை அடுத்த தேர்தலில் நாட்டுவதற்கு வைத்துள்ளீர்களா என்று வினவியதுடன் பொய்களைக் கூறி கூட்டமைப்பு வாக்கு கேட்க வேண்டியதில்லை என்றார். (2)

# வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் பெருந்தோட்ட மக்களை அரசாங்கம் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது.

பெருந்தோட்ட மக்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாகவே கருதப்படுவதாக ஜனநாயக தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார். ரூபாவின் பெறுமதி இறக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் குறைந்த வருமானமுடைய பெருந்தோட்ட மக்கள் மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்கக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வரவுசெலவுத்திட்டம் தனியார் துறை ஊழியர்களுக்கு எவ்வித நன்மைகளையும் வழங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (2)

# இலங்கையின் அபிவிருத்தியில் ஈடுபட கட்டார் முதலீட்டாளர்கள் ஆர்வம்

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான ஆர்வத்தினை கட்டார் முதலீட்டாளர்கள் வெளிப்படுத்தியுள்ளதாக கட்டார் பிரதமர் ஷேக் ஹமட் பின் ஜாஸீம் பின் ஜபெர் அல் தானி தெரிவித்துள்ளார்.

இந்தோனேசிய பாலித்தீவில் நடைபெற்று வரும் நாட்டுத்தலைவர்கள் ஜனநாயக அரங்கம் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். கொழும்பிலும் ஏனைய சுற்றுலா மைய ங்களிலும் ஆடம்பர உல்லாச விடுதிகளை அமைப்பதற்கு தமது முதலீட்டாளர்கள் விருப் பம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆராய்வதற்காக கட்டாரைச் சேர்ந்த குழுவினர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் கட்டார் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் கட்டார் பிரதமருக்கு விளக்கிக் கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டார் பிரதமர் மற்றும் அவரது குழுவினரின் இலங்கைக்கான விஜயத்திற்காக காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரும் கலந்து கொண்டனர். (2)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பிரிவுபசார விழாவும் நினைவுப் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியற் கல்லூரியில் மூன்று வருடங்கள் தமது பயிற்சியினை சிறப்புற நிறைவு செய்து வெளியேறுகின்ற 10 ஆம் அணியினரின் பிரிவுபசார விழாவும் நினைவுப் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக UMCOR நிறுவனத்தின் வட மாகாண சிரேஷ்ட திட்டமிடல் அதிகாரி ரி.பாலசுப்ரமணியம், சிறப்பு விருந்தினராக யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன், வைத்தியகலாநிதி லயன்.வை. தியாகராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**
**நான்காமிடத்தில் சனி! நல்ல மாற்றம் வரும் இனி!**

***உதவிகள் செய்வதன் மூலம் நல்ல பதவிகளை வரவழைத்துக் கொள்ளும் கடக இராசி நேயர்களே!***

எதிர்ப்பைக் கண்டு எள் அளவும் அஞ்சாதவர்கள் நீங்கள். கோடீஸ்வரராக இருந்தாலும் சரி கூலித் தொழிலாளியாக இருந்தாலும் சரி நாடி வந்தால் நன்மைகளைச் செய்து கொடுப்பீர்கள்.

தேடிச் சென்று வலிய உதவி செய்வீர்கள். உதவும் குணம் ஒன்றால் தான் நீங்கள் உயர்ந்தவர்களாக காட்சியளிக்கிறீர்கள். உங்கள் இராசி நாதன் சந்திரன் இருக்கும் சார பலம் அறிந்து யோக பலம் பெற்ற நாளில் அதற்குரிய பரிகாரங்களைச் செய்தால் நினைக்க இயலாத இராஜயோகம் உங்களுக்கு வந்து சேரும்.

திருமண வயதுடைய கடக இராசிக்காரர்களுக்கு பொருத்தம் மிகவும் தேவை. குறிப்பாக முக்கியமான பொருத்தங்கள் ஆறு இருப்பது நல்லது. அது மட்டுமல்லாமல் தெசா சந்திப்பு இல்லாமல் சஷ்டாஷ்டம் தோஷமில்லாமல் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தால் தான் சுகமான வாழ்க்கையை எதிர்கொள்ளலாம்.

**சுபீட்சத்தை வழங்கும் சுக ஸ்தான சனி!**

மார்கழி 5 ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். அங்கு உச்சம் பெறும் சனி உங்கள் இராசியையும் உங்கள் இராசிக்கு ஒன்று, ஆறு மற்றும் பத்து ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். இதன் விளைவாக உங்கள் பணிகளில் மாற்றம் ஏற்படலாம். கூட்டு முயற்சிகளில் ஆற்றல் மிக்கவர்கள் பிரிந்தாலும் வீட்டு உறுப்பினர்களையோ வேற்று மனிதர்களையோ சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள்.

இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு ஏற்றம் தருமா? மாற்றம் தருமா? அல்லது ஏமாற்றம் தருமா? என்பதை உங்கள் சுய ஜாதகத்தின் தெசாபுத்தி வலிமையை கொண்டே அறியலாம். உங்கள் இராசிக்கு சனி பகவான் 7,8 க்கு அதிபதியாக விளங்குகிறார். அவர் உச்சம் பெறும் பொழுது கேந்திராதிபத்திய தோஷம் என்று சிலர் சொல்வார்கள். ஆனால் நீங்கள் செய்த ஒரு பாக்கியம் உச்சம் பெற்று சனி உலாவரும் பொழுது அதை குரு பார்ப்பதுதான்.

குரு பார்க்க கோடி நன்மை அல்லவா? எனவே குருவின் பார்வையால் சனியின் கடுமை குறைந்து கொடுமை விலகி இனிமை உங்கள் வாழ்வில் சேரப் போகின்றது. அர்த்தாஷ்டமச் சனியின் ஆரோக்கியத்தில் சிறு சிறு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் என்பதாலும் அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி அடுத்தவர்களோடு பிரச்சினைகளை உருவாக்கும் என்பதாலும் எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது தான். எனவே தொல்லைகள் அகல சனி கவச பாராயணம் படியுங்கள். கற்பக விநாயகரை சனி ஆதிக்கம் பெற்ற நாளில் கைகூப்பி தொழுது வழிபட்டால் அற்புத பலன் கிடைக்கும்.

**மந்தன் பார்வையில் ஏற்படும் மகத்தான பலன்கள்.**

உங்கள் இராசிக்கு சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 1,6,10 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. 7,8 இன் அதிபதியான சனி இராசியைப் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது சந்தேகம்தான். ஆனால் ஆறாம் இடத்தைப் பார்ப்பது அற்புதமான பலன்களை அள்ளித் தரும். விபரீத ராஜயோகத்தை கொடுத்து வியக்கும் விதத்தில் வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்கும்.

ஜென்ம இராசியை சனி பார்ப்பதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகளைக் கொடுக்கலாம். வரும்முன்காப்போம் திட்டத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது. வாகனங்களில் செல்லும் பொழுதும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அரசியல்வாதிகளுக்கு பொறுப்புக்கள் மாறலாம்.

எட்டுக்கு அதிபதி சனி ஆறாமிடத்தைப் பார்ப்பதால் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த உத்தியோக உயர்வு இப்பொழுது வந்து சேரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பகையான நட்பு உறவாகும்.

பத்தாமிடத்தைப் பார்க்கும் சனியால் உங்கள் பெயரில் உள்ள தொழில்களையும் சொத்துக்களையும் மனைவி மக்கள் மற்றும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் பெயருக்கு மாற்றலாமா? என்று நினைப்பீர்கள். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படும். பங்குதாரர்கள் தங்கள் கணக்கு வழக்குகளை சரிபார்த்து கொள்வது நல்லது.

**குருப்பெயர்ச்சிக்காலம்.**

சுமார் 2 அரை ஆண்டுகள் துலாம் இராசியில் சஞ்சரிக்க வேண்டிய சனி பகவான் கூடுதலாகவே சில மாதங்கள் அந்த இராசியில் சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருக்கின்றது. 17.05.2012 இல் இடப இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். 28.05.2013 இல் மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். 13.06.2014 இல் கடக

## எதிர்ப்பைக்கண்டு எள் அளவும் அஞ்சாத நெஞ்சம் கொண்டவர்கள்

இராசியில் குரு உலா வரப்போகிறார்.

இடப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றங்கள் கூடும். முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். சகோதர ஒற்றுமை பலப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.

மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால் தாயின் உடல் நலம் சீராகும். புதிய வீடு கட்டி குடியேறும் வாய்ப்புக் கிட்டும். உத்தியோக முயற்சி வெற்றி தரும்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அது உங்கள் ஜென்ம இராசியாகவே இருப்பதால் குரு சந்திரயோகம் செயற்பட போகிறது. எனவே பம்பரமாய் சுழன்று பணிபுரிவீர்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பிள்ளை பிறக்காத தம்பதியினருக்கு அந்த கவலை தீரும். வரன்களுக்காக காத்திருந்த இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மணமாலை சூடுகின்ற வாய்ப்புக் கிட்டும். தொழில் வளம் மேலோங்கும். இது ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும்.

குரு பலம் இழக்கும் காலங்களில் முறையான வழிபாடுகளையும் பரிகாரங்களையும் செய்வது நல்லது.

**இராகு-கேது பெயர்ச்சிக்காலம்!**

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ் சரிக்கப்போகிறார்கள். 21.06.2014 இல் கன்னி இராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலா வரப்போகிறார்கள்.

முதல் இராகு - கேது பெயர்ச்சிக்காலத்தில் இடம், பூமிக்குரிய இடத்தில் இராகு-கேதுக்கள் சஞ்சரிப்பதால் இந்த 4 ஆம் இடத்து இராகுவால் வீடு கட்டி குடியேற வேண்டுமென்ற எண்ணம் உங்கள் உள்ளத்தில் குடிகொள்ளும். அடுத்த இராகு- கேது பெயர்ச்சிக் காலத்தில் எதிர்பாராத தனலாபம் வந்து சேரும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு கிட்டும். வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். கூட்டுத் தொழிலில் மாற்றம் ஏற்படும். சர்ப்ப சாந்தி செய்து கொள்வதன் மூலம் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

**சனியின் சக்ர காலம் பொற்காலமாக மாற...**

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி ஐந்து முறை வக்ரமடைந்து, வக்ரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறும்போது கூடுதல் கவனம் செலுத்தினால் தான் குடும்பத்தில் நிம்மதி கிடைக்கும். வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உடல் ஆரோக்கியத்தில் திடீர் தாக்குதல்கள் ஏற்பட்டு மற்றவர்களை நம்பிச் செய்த காரியங்கள் பாதியிலேயே நின்று போகக் கூடும். உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடி அமையாது. வீண்பழிகளில் இருந்து விடுபட முறையான பரிகாரங்களை சுய ஜாதக ரீதியாக பார்த்து செய்து கொள்வது நல்லது.

**சனியின் சஞ்சாரப் பலன்கள்!**

நான்காமிடத்துச் சனியால் நல்ல மாற்றங்கள் வருமா?

இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாமிடத்தில் சனி சஞ்சரித்து வந்தார். இப்பொழுது நான்காமிடத்தில் சனி சஞ்சரிக்கப்போகிறார். ஆஹா! அர்த்தாஷ்டமச் சனியாக அல்லவா வருகின்றது. அஷ்டமத்துச் சனியில் பாதிப்பங்கு வலிமை இதற்கு ஏற்படுமே, நமது நிலைமை என்ன ஆகும் என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் உச்சம் பெற்ற சனி உங்களுக்கு ஒரு போதும் தீமையை கொடுக்கமாட்டார். உள்ளத்தில் அவரை நினைத்து பூஜிப்பதன் மூலமும் ஒரு காரியத்தை தொடங்கும் முன்னே யோசிப்பதன் மூலமும் ஒளிமயமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார்.

அந்த அடிப்படையில் உலா வரும் சனி 4 இல் வரும் பொழுது நல்ல வாய்ப்புக்கள் இல்லம்

**சிவல்புரிசிங்காரம்**

தேடி வரலாம்.

கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்பட்டால் ஆபத்தில் இருந்து தப்பிக்க இயலும். மொத்தத்தில் கேள்விக்குறியாக இருந்த உங்கள் வாழ்க்கை இந்த சனிப்பெயர்ச்சியால் ஆச்சரிக் குறியாக போகிறது.


**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!**

ஒலி கொடுத்தால் வழி கிடைக்கும் என்று வாகனங்களில் எழுதியிருப்பதை பார்த்திருப்பீர்கள். காகத்தை வாகனமாகக் கொண்ட சனி பகவானுக்கோ நாம் ஒளி கொடுத்தால் நமக்கு நல்ல வழி கிடைக்கும். சிறப்பு வழிபாடாக எள் தீபம் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏற்றி ஒற்றைச் சனீஸ்வரரை வழிபாடு செய்யுங்கள்.

அர்த்தாஷ்ட மத்தில் நானும்
அனுமனே உனைத் துதித்தேன்!
வெற்றியை எனக்குத் தந்தே,
வேந்தனாய் வாழ வைப்பாய்!( தொடரும்)

# தியானம்

## ஆனந்தத்தின் வாசல்



ஆன்மீகம் 04

நான் ஏற்கனவே சொன்னதைப் போல இந்த மன அழுத்தம் என்பது முற்காலத்தில் அறியாமை என்று அழைக்கப்பட்டது. ஒருவர் தனக்குள் தெளிவாய் இருக்கும்போது மன அழுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தியானம் என்பது ஒரு செயலல்ல; இது ஒரு தன்மை. உங்கள் உடலையும் மனதையும் உணர்ச்சிகளையும் சக்தியையும் ஒரு குறிப்பிட்ட நிலையில் பக்குவப் படுத்தும்போது தியானம் தானாகவே நிகழ்கிறது. இது எப்படி என்றால், நீங்கள் மண்ணைப் பக்குவப்படுத்தி தேவையான நீரையும் உரத்தையும் அளித்து சரியான விதையை விதைத்தால், விதை வளர்ந்து மலர்களையும் பழங்களையும் வழங்கும். நீங்கள் ஆசைப்பட்டதால், மரத்தில் மலர்களும் பழங்களும் வரவில்லை. அவை வருவதற்குத் தேவையான சூழலை உருவாக்கியதால் மட்டுமே. வருகின்றன. அதேபோல உடல், மனம், உணர்ச்சிகள், சக்திநிலை இவற்றைக் கொண்ட 'நீங்கள்' என்ற தன்மையின் நான்கு பரிமாணங்களுக்கும் தேவைப்படும் சூழலை உங்களுக்குள் உருவாக்கினால் தியானம் என்பது இயல்பாகவே உங்களுக்குள் மலரும். இது ஒரு குறிப்பிட்ட தன்மை, உங்களுக்குள்ளேயே நீங்கள் அனுபவிக்கக் கூடிய நறுமணம் அது. தியானம் நீங்கள் செய்யும் செயல் அல்ல.

கேள்வி: நீங்கள் கற்றுத்தரும் பிராணாயாமப் பயிற்சிகளுக்கும் மற்ற இடங்களில் கற்றுத்தரப்படும் பிராணாயாமப் பயிற்சிக்கும் வித்தியாசம் தெரிகிறது. எது சரியானது?

சத்குரு: "பிராணா" என்றால் உயிர் சக்தி, "யாமா" என்றால் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வது. ஈஷா யோகாவில் பிராணாயாமத்தை "சக்தி சலன க்ரியா" என்கிறோம். அப்படியென்றால் நீங்கள் விரும்பும் விதத்தில் உங்கள் சக்திகளை நகர்த்திக்கொள்ள உதவும் அறிவியல் என்று பொருள். உங்கள் சக்தியின் மீது ஆளுமை இல்லாமல் பிராணாயாமா என்று பேசுவது பிராணாயாமாதான். துரதிருஷ்டவசமாக உலகில் பெரும்பாலானவர்கள் பிராணாயாமத்தை புத்தகத்திலிருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஒரே ஒரு புத்தகம் தான் உங்களுக்கு சரியான பிராணாயாமத்தைக் கற்றுத்தர முடியும். அது உங்கள் உடல் தான். இது உங்களை படைத்தவரால் எழுதப்பட்ட புத்தகம். இதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. இந்த உடல் எப்படி செயல்படுகிறது என்ற விழிப்புணர்வு உங்களுக்கு இருந்தால் மட்டுமே, உங்களால் பிராணாயாமத்தை வடிவமைக்க முடியும்.

யோகப் புத்தகங்களில் என்ன எழுதப்பட்டிருந்தாலும் சரி, எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. நான் எங்கே சென்றாலும் மக்கள் எனக்கு புத்தகங்களில் இருந்து மேற்கோள் காட்ட முயற்சிக்கிறார்கள். நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் அவை சூத்திரங்கள். சூத்திரம் என்பது ஒரு நூலைப் போல. ஒரு பூமாலையின் நடுவில் ஒரு நூல் இருப்பதைப் போல. நீங்கள் ஒரு மாலையை அணிவது அதில் உள்ள நூலுக்காக அல்ல; அதிலுள்ள மலர்களுக்காகத்தான். ஆனால், அந்த நூல் இல்லாமல் மாலை இல்லை. யோகா சூத்திரங்கள் என்பதும் அதில் குறிப்பிட்டுள்ளவையும் நூல் மட்டுமே. சூத்திரம் என்றால் இதுதான்:-

ஒவ்வொரு ஆன்மீக குருவும் அவரைச் சுற்றியுள்ள மக்களைக் கொண்டு அவருக்கேற்ற மாலையை வடிவமைக்க அனுமதிப்பது. உடனடித் தேவை என்னவோ அதைப்பொறுத்து எல்லோரையும் சேர்த்து அவர் மாலையை அமைக்கிறார். ஆனால், மக்கள் நூலைப்பற்றி மட்டுமே போதிக்கிறார்கள். அதைக் கொண்டு ஒரு மாலையை உருவாக்குவது பற்றிய புரிதல் அவர்களிடம் இல்லை. யாருக்கும் நூலை மட்டும் அணிந்து கொள்ள ஆர்வம் இல்லை, அல்லவா?

கேள்வி: நீண்ட நேரத்திற்கு அல்லது நீண்ட காலங்களுக்குச் செய்யப்படும் தியானம், ஆன்மீக வளர்ச்சிக்கு எந்த விதத்தில் உதவி புரிகிறது?

சத்குரு: தியானத்தை நீங்கள் ஒரு தொழில் நுணுக்கமாகக் கற்றுக் கொண்டீர்களேயானால் அது முடிவில்லாத துன்பமாகத்தான் இருக்கும். ஏனென்றால், அது அப்படி வேலை செய்யாது. உங்கள் உடலையும், உங்கள் மனதையும் உங்கள் உணர்ச்சிகளையும், உங்கள் உயிர்ச்சக்திகளையும் ஒரு குறிப்பிட்ட விதமான பக்குவத்தில் எடுத்து வந்தால் தியானம் என்ற மலர் இயல்பாகவே மலர்கிறது. அதன் நறுமணம் எங்கும் பரவுகிறது. எனவே தியானம் என்பது ஒரு தொழில்நுட்பம் அல்ல அது ஒரு குறிப்பிட்ட விதமான தன்மை.குறிப்பிட்ட விதமான இருப்பு. எனவே அந்த நிலையை அடைவதற்கு பலவிதமான வழிமுறைகள் உள்ளன.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# முஸ்லிம்களின் ஆடற்கலைகளில் களிகம்பு



01

மனிதனிடம் வெளியான முதல் மொழி சைகை. இதன் மூலமே மனிதன் உணர்வுகளை வெளிப்படுத்தினான். எண்ணங்களை எடுத்துப் பேசினான். தனது உறுப்புக்களை அசைப்பதில் ஒரு வகையான இன்பம் இருப்பதை அவன் கண்டான். அக்கவித்துவ உணர்வின் உந்துதலால் அவன் இயற்றிய ஆதிக் கவிதையே ஆடல். மனத்தளவில் ஏற்படுகின்ற இன்பநிலையை சக மனித உள்ளங்களோடு பகிர்ந்து கொள்வதே ஆடலாகும்.

ஆடல் கலைக்கு ஒரு பெரிய வரலாறு உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் ஆதிகாலந் தொட்டு போற்றிப் பாதுகாக்கப்பட்டு மதிக்கப்படுவது தமிழ் மரபுவழி ஆடற்கலைகள். ஆடல்கலை பலவகைப்பட்டதாகும். சேர நாட்டின் மரபுவழி நடனம் "கதகளி" சேரத்தின் அழகுமிகு ஆட்டம் மோகினி ஆட்டம் தெலுங்கு தேசத்தின் பெருமை பேசுவது குச்சுப்பிடி பண்டைய கலிங்கத்தின் மரபுவழி ஆடல் ஒடிசி கன்னடத்தின் பெருமை பேசுவது "யக்" "கானம்" மணிப்பூர் பாரம்பரியத்தின் வெளிப்பாடு மணிப்புரி நடனம். வடஇந்தியாவின் மரபுவழிக் கலைநடனம் கதக் தெலுங்கின் இசையினையும் தமிழின் இயலினையும் கொண்டது. பாகவதமேளா பிரபஞ்ச செயற்பாட்டின் வெளிப்பாடு தாண்டவ நடனங்கள்.

முத்தமிழ் ஆடற்கலை குறவஞ்சி கேரளத்துக்கு மக்கள் கலை ஓட்டம் துள்ளல். அழகு மிகு ஆட்டம் கரகாட்டம். அருகி வரும் நிழற் கலை பாவைக்கூத்து. தமிழ்நாட்டில் மரபு வழி நிகழ்கலை தெருக்கூத்து. வங்கத்தின் பெருமை கூறுவது யாத்ரா. இப்படி பலவகை ஆடல்கள் பார் எங்கும் பரந்து விரிந்துள்ளது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

இலங்கைத் திருநாட்டின் தமிழ் முஸ்லிம் கிராமியக்கலை இலக்கிய வழக்கில் கோலாட்டம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. கோலாட்டம் பல சமூகத்தவர்கள் மத்தியிலும் இருந்து பாதுகாக்கப்பட்டு வருகின்ற அரும் பெரும் கலையாகும். இவை சமூகத்திற்கும் நாட்டிற்கும் தக்க வகையில் வேறுபட்டிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

தமிழ் சகோதரர்களுக்கு மத்தியில் கும்மி, கோலாட்டம், வசந்தன், வில்லுப் பாட்டு, நாட்டுக்கூத்து ஆகியன கிராமியக் கலை வடிவங்களாகக் கருதப்படுவது போன்று முஸ்லிம்களிடமும் பக்கீபைத்து, நாட்டார்பாடல், களிகம்பு, சிலம்பு, சீனடி ஆகியன அவர்களது கலைகளாகப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

இவற்றுள் முஸ்லிம் மக்களது கிராமிய கலைவடிவங்களுள் ஒன்றான களிகம்பு ஆட்டத்தினை உற்றுநோக்குவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

நமது அண்டை நாடான இந்தியாவின் சகல மாகாணங்களிலும் கிராமிய கோலாட்ட வடிவங்கள் உரிய இடத்தை வகிக்கின்றன. தமிழ் நாட்டில் கோலாட்டங்கள் நான்கு வகையாக ஆடப்படுகின்றன. அவ்வையாவன பின்னல் கோலாட்டம், வைந்தானைக் கோலாட்டம், அயிந்தன்ர, களியல் ஆகியனவாகும். வைந்தானைக் கோலாட்மும் களியலும் ஆண்கள் பங்கு கொள்கின்ற ஆட்டங்களாகும்.

கர்நாடக மாநிலத்தில் கோலாட்டம் சித்தல் தூர்க் என்றும் ராஜஸ்தானில் டாண்டியராஸ் என்றும் சௌராஸ்டிரத்தில் பாண்டிய என்றும் கேரளத்தில் கோள்களி என்றும் அழைக்கப்படுகிறது. களியல் என்றால் மலையாளத்தில் ஆட்டம் என்பது பொருள். கோல் தடியையும் களி ஆட்டத்தையும் கோள்களி என்ற வார்த்தை குறிப்பிடுகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார கலை இலக்கிய பாரம்பரிய வடிவங்களில் கோலாட்டம் மிக முக்கியமானது. இக்கலை மிக நீண்ட நெடுங்காலமாக முஸ்லிம்களால் பாதுகாத்து வருகின்ற ஓர் கிராமியக் கலையாகும்.

தற்போது இக்கலை நமது இலங்கைத் திருநாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளான மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி, குருநாகல், பேருவலை போன்ற இடங்களில் ஆங்காங்கே வழக்கத்தில் உள்ளன.

பாரம்பரியக் கலைகளுக்கான வளர்ச்சி, நகரங்களை விட கிராமங்களிலேயே அதிகமாக காணப்படுகின்றது. விவசாய வளம் நிறைந்த கிராமங்களிலும் கடற்றொழில் முயற்சியுள்ள இடங்களிலும் இக்கலை போன்ற ஆடற்கலைகள் வளரச் சாத்தியங்கள் அதிகம். விவசாயிகள் விதைப்பு, அறுவடை, சூடு அடிப்பு ஆகிய காலங்களிலும் கடற்றொழிலாளர்கள் கடலில் வலை விரித்தபின் ஏற்படும் ஓய்வு நேரங்களிலும் இக்கலையில் ஈடுபட்டு மகிழ்கின்றனர்.

(தொடரும்)

**பாவலர் சாந்தி முஹியித்தீன்**

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

16-XII

**வாழையில் வைரசு நோய்கள்**


**வாருங்கள் எம்னிய உறவுகளே...**

வாழையில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பல பீடைகளைப் பற்றி இக்கட்டுரைத் தொடரில் விரிவாக ஆராய்கின்றோமல்லவா. இதற்குள்ளும் தெரிந்தும் தெரியாமலிருக்கும் நோய்களும் ஒரு வகையெனவும் பார்த்தோம். அதிலும் வாழைச் செய்கையாளர்களை மட்டுமல்ல ஆராய்ச்சியாளர்களையும் விரிவாக்க உத்தியோகத்தர்களையும் ஆச்சரியத்திலாழ்த்தும் வைரசு நோய்கள் தனித்துவமானவை. வைரசு கிருமி தொற்று ஏற்பட்ட வாழைகளை குணமாக்குவதென்பது கடினமானது.உண்மையிலேயே இயல்ாது என்றே கையை விரிக்க வேண்டும். ஆனால் அதனை கட்டுப்படுத்துவதற்கு இரசாயனவிற்பனை கடையில் ஏதோவொரு இரசாயனத்தை கொடுத்து விவசாயிகளை ஏமாற்றுவதை என்னவென்பது. இதுபற்றிய சரியான விளக்கத்தை இங்கே தருகின்றேன். வாழைச் செய்கையாளர்கள் மட்டுமல்ல ஏனையோரும் இக்கட்டுரைத் தொடரினை தொடர்ந்து வாசிக்கின்ற செய்தியை எனது மாணவர்கள் மூலமாக அறிந்து எழுதும் இக் கைகள் அகமகிழ்கின்றன. உங்கள் கருத்துக்களுக்கு என்றுமே இடமுண்டு. தொடர்ந்து வாசியுங்கள். வலம்புரியின் இதழ்களுக்கூடாக இது சாத்தியமாயுள்ளது.

வைரசு நோய்களுள் முதன்மையான வாழையில் குருமன் அல்லது கழுத்தடைப்பு நோய் பற்றி கடந்த வாரங்களில் பார்த்தோம். இன்று ஏனைய வைரசு நோய்களைப் பற்றி பார்ப்போம்.

வைரசு நோய்கள் ஏனைய நுண்ணங்கிகளினால் ஏற்படுத்தப்படுபவை போலல்லாது அவற்றினது தாக்கம் அதிகமாகவே உணரப்படுவதனால் அவற்றை மேலும் பரவவிடாது தடுத்தல் என்றுமே சிறந்தது. இவற்றைக் கட்டுப்படுத்துவூதற்காக வைரசு நாசினிகலெதுவும் இல்லையென்பதனால் நோய் ஏற்பட்ட பின்பு குணமாக்குதல் அல்லது கட்டுப்படுத்தல் இயலாது. மேலும் இவ்வாறான நோயின் பரவுதலுக்கு பூச்சி பீடைகள் காவிகளாக இருப்பதுடன் குறிப்பாக வாழைக்குட்டியினூடு பரவுதலும் காரணமாக உள்ளதனை அறிவீர். வைரசு நோய்களை வரிசைப்படுத்தினால் முதலில் குறிப்பிட்ட கழுத்தடைப்பு நோயுடன் கெக்கரி சித்திர வடிவு வைரசு, வாழையில் கீறுதல் போன்று உருவாக்கும் வைரசு (Banana Streak Virus) வாழைப் பொத்தி சித்திர வடிவு வைரசு, வாழையில் வீரியங்குறைந்த சித்திரவடிவு வைரசு என்பவற்றை குறிப்பிடலாம்.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



வாழை தண்டில் கோடுகள்



வாழைப் பொத்தியில்

**கெக்கரி சித்திரவடிவு வைரசு**

இவ் வைரசு தொற்று உலகம் பூராகவும் வாழையில் அவதானிக்கப்பட்டதொன்று. இவ் வைரசுவின் தொற்றுதலினால் இலைகளில் சித்திரவடிவிலான புள்ளிகள் தோன்றும். இலைகள் ஒரே பச்சைநிறமில்லாது மெல்லிய அல்லது வெளிறிய பச்சை நிறம் மற்றும் பச்சை நிறம் ஆகியனவற்றுடன் மெல்லிய மஞ்சள் நிறமும் கலந்திருக்கும். இலைகள் வளர்ச்சி குன்றி வழமையான உருவிழந்து இருக்கும். இவையனைத்தும் வளரும் வாழைக்குட்டிகளிலேயே அதிகமாகக் காணப்படும். குளிர்மையான காலங்களில் இவ்வகையான சித்திரவடிவு அதிகமாகக் காணப்படும்.

இவ் வைரசுவீரியங்கூடிய நிலையில் வாழை வெளிறியும், வாழைத்தண்டினுள்ளே நிறமாற்றம் ஏற்பட்டு இழையங்கள் இறக்கத் தொடங்குவதும் நோய் முற்றிய நிலையில் வாழை முழுவதுமாக இறந்துவிடுவதனையும் காணலாம். இவ்வரைசு தக்காளி, கறிமிளகாய் மற்றும் பூசணி பயிர்களிலும் தொற்று ஏற்படுத்தக்கூடியது. இவைதவிர களைகளிலும் தொற்றக்கூடியது. இவ்வரைவசுவினை அழுக்கணவன்கள்(ஏபிசு கொசிப்பி, மைசசு பெசிக்கே) காவுகின்றன. இதனால் அழுக்கணவன்களை கட்டுப்படுத்துவதாலும் இவ் வைரசு புதிய வாழைகளுக்குபரவுவதை தடுக்கலாம்.


இங்கே அழுக்கணவன் சாறு உறிஞ்சும் பூச்சிபீடையாதலால் அதனை விரைந்து கட்டுப்படுத்த ஊடுபுகுந்து தாக்கும் பீடை நாசினிகளைப் பயன்படுத்தலாம்.

மேலும் களைகள் விருந்து வழங்கிகளாகத் தொழிற்படுவதால் களைக்கட்டுப்பாடு அவசியம் செய்தல் வேண்டும்.

**வாழையில் கீறல் தோற்றுவிக்கும் வைரசு**

இது ஒரு வகை பதிய நோயாயினும் பலனுடைய வாழைகளில் நீள்பக்க கீறல்கள் இலைகளில், தண்டில் குறிப்பாக மடலில், வாழைக்குலையில் காண ப்படும். வாழையில் இவ்வைரசு வினை காவுவதற்கு மாவுப்பூச்சிகள்(Mealy bugs) உதவுகின்றன. தற்போது வாழைகளிலும் மாவுப்பூச்சியின் தாக்கம் அதிகரித்து காண ப்படுவதனால் இவ்வைரசு விரைந்து பரவுதலுக்கான வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. இவ் வைரசு பரவுதலைத் தடுக்க மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்துதல் அவசியமாகும். ஊடு புகுந்து தாக்கும் பூச்சிநாசினியை இதற்காக விசிறலாம். அத்துடன் வாழைக்குட்டிகளின் தெரிவின் போது மாவுப் பூச்சி தொற்றுதலில்லாத வாழையின் அடியிலிருந்து வாழைக்குட்டிகளைப் பெறவேண்டும்.

வாழையில் வைரசை காவும் அழுக்கணவன்



**வாழைப் பொத்தி சித்திரவடிவ வைரசு (Banana bract Mosaic Virus)**

முதன்முதலில் பிலிப்பைன்ஸ் நாட்டில் அவதானிக்கப்பட்ட இவ்வைரசு இப்போது இலங்கை, இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் பரவியுள்ளது. இவ்வைரசுவின் தொற்றுதலினால் வாழையின் வளர்ச்சி பாதிக்கப்படும், வாழைக்குட்டிகள் உருவாவது தடைப்படும், வாழைக்குட்டிகள் வளர்ச்சிகுன்றியிருக்கும், வாழைக்குலையின் அளவு, பருமன் பாதிக்கப்படும். வாழைப் பொத்தியில் சித்திரவடிவினை அவதானிக்கலாம். இவ்ரைவசு வினை அழுக்கணவனே காவுதலால் அதனை கட்டுப்படுத்துதல் அவசியம். இந்நோயின் தீவிரதன்மையை, தரமான, நோயற்ற வாழைக்குட்டிகளை நடுகைக்கு பயன்படுத்துவதன் மூலமும் அழுக்கணவனை கட்டுப்படுத்துவதன் மூலமும் குறைக்கலாம். வாழைத் தோட்டத்தை சுத்தமாக களைகளற்று வைத்திருந்தாலும் நடுகைக்காக நோய், பூச்சி பீடையற்ற வாழைக்குட்டிகளின் தெரிவு இவ்வைரசுக்களின் பரவலை தடுக்க உதவும். இங்கே அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுதல் முக்கியமானதாகும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. (தொடரும்)

# ஜேர்மன் சென்ற இலங்கை குடும்பம் பிரித்தானியா திரும்பி வர வேண்டும்

## பிரி. நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து 6 வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனிக்குதப்பிச் சென்ற இலங்கை தமிழ் குடும்பம் ஒன்று மீண்டும் பிரித்தானியாவுக்கு திரும்பவேண்டும் என்று பிரித்தானிய மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இலங்கைக் குடும்பம் முன்னர் வடக்கு லண்டனில் வசித்து வந்த நிலையில் அந்த குடும்பத்தினர் சட்டரீதியற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டமையை அடுத்து ஜேர்மனிக்கு தப்பிச் சென்றனர்.

இது தொடர்பாக வழக்கு பிரித்தானிய மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தது. இதன்போது குறித்த குடும்பத்துக்கு பிரித்தானிய உள்நாட்டு செயலாளர் 37 ஆயிரம் பவுண்சை நட்டஈடாக வழங்க வேண்டும் என்றும் நீதிமன்[illegible]டுள்ளது.

இந்த தொகை எதிர்வரும் 28 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது. நீதிபதி ஜஸ்ரிஸ்கிரஸ்ரனின் தீர்ப்பின்படி குறித்த இலங்கை குடும்பத்தின் தலைவரான கணவரின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனரீதியாக பாதிக்கப்பட்ட அவரின் மனைவி 14 மற்றும் 23 வயதுகளை கொண்ட அவர்களின் பிள்ளைகள் ஆகியோர் பிரித்தானியாவுக்கு திரும்ப உரித்துடையவர்களாவர்.

இந்தக் குடும்பத்தினர் கடந்த 2006 ஆம் ஆண்டு எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் பிரித்தானிய குடிவரவு மற்றும் பொலிஸ் அதிகாரிகளினால் முற்றுகையிடப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (2)

# கடத்தல் குற்றம் தொடர்பில் இலங்கை தமிழர்கள் கைது

ஜேர்மனியில் இருவரைக் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு மூன்று இலங்கை தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா வோட்ச் இணையம் தெரிவித்துள்ளது.

23 தொடக்கம் 33 இற்கு இடைப்பட்ட வயதைக் கொண்ட இவர்கள் 42 மற்றும் 15 வயதுகளை கொண்ட இருவரை க்டத்தி அவர்களிடம் கொள்ளையை நடத்தினர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி இந்த சம்பவம் ரவன்ஸ்பேக் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா வோட்ச் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இது ஐரோப்பியாவில் இடம்பெறும் சாதாரண குற்றச்செயல் என்று ஜேர்மனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# இலங்கையில் பயிற்சிபெற இந்திய இராணுவத்திற்கு அழைப்பு

இலங்கையில் பயிற்சி பெற்றுக்கொள்ளுமாறு இந்திய படையினருக்கு இலங்கை இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.

படை அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி பயிற்சி அளிக்கும் சாத்தியம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு இராணுவத்தினர் இந்திய படையினரிடம்கோரியுள்ளனர்.

மூன்று தசாப்தகால யுத்தம் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் இலங்கை இராணுவம் கணிசமான அளவு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்த தந்திரோபாயங்கள், யுத்த பொறிமுறைமை போன்றன தொடர்பில் இலங்கை இராணுவத்தினர் பெற்றுக் கொண்ட அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இராணுவப்பயிற்சி முகாம் ஒன்றுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை இராணுவத் தளபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (2)

# வடக்கு தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு மானியமும் உப ஆராய்ச்சி நிலையமும் அவசியம்

## விஜயகலா எம்.பி.கடிதம்



வடபகுதி தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பு மானியங்கள் வழங்க வேண்டும். உப ஆராய்ச்சி நிலையமும் அவசியம் என விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

யுத்தம் காரணமாக வடக்கில் தெங்கு பயிர்ச்செய்கை பெரும் பாதிப்புக்களை சந்தித்துள்ளது. எனவே, வடக்கில் தெங்கு பயிர்ச் செய்சையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க வேண்டும். தெங்கு கைத்தொழிலை மேம்படுத்தவும் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்று ஐ.தே.கவின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் தெங்கு அபிவிருத்தி காரியாலங்கள் அமைக்கப்படுவதுடன் அங்கு போதியளவு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டும். வடக்கில் தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பான உப ஆராய்ச்சி நிலையமும் அமைக்கப்படவேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுக்கு கையளித்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தெங்கு பயிர்ச்செய்கையினை மேம்படுத்தவும் தெங்கு கைத்தொழிலை வளர்ச்சியடைச் செய்யவும் புதிய திட்டங்களை தெங்கு அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதனைவிட பாதிக்கப்பட்ட தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நிவாரண திட்டங்களையும் அமைச்சு முன்னெடுக்க வேண்டும்.

தற்போது வடக்கில் இவ் அபிவிருத்தி என்ற பெயரில் தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இருந்ததைப் போன்று புது நடுகை, மீள்நடுகை மானியங்கள் எதுவுமே வழங்கப்படுவதில்லை. இதனால் பாதிக்கப்பட்ட தெற்குப் பயிர்ச்செய்கையாளர்களும் மேலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு மானியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை கடந்த வருடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சகலதையும் இழந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நிலையில் தென்னைப் பயிர்ச்செய்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு தெங்கு அபிவிருத்தி அமைச்சானது உதவ வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

யுத்தம் காரணமாக பல்லாண்டுகளாக தென்னந்தோட்டங்கள் பராமரிக்கப்படவில்லை. இதனால் பெருமளவு தோட்டங்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் தெங்குச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் விரைவுபடுத்தப்படவேண்டும்.

யுத்தத்தினால் பெரும் அழிவுகளை சந்தித்துள்ள வடபகுதியில் தென்னந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தென்னந்தோட்டங்களில் காணப்படும் பதுங்கு குழிகள் மற்றும் பாதுகாப்பு அணைகள் என்பவற்றை துப்புரவு செய்வதற்கும் இயந்திர உதவிகளை அமைச்சு வழங்க வேண்டியது அவசியம்.

இதனைவிட தென்னங்கன்றுகளை நாட்டுவதற்கான குழிகளை வெட்டவும் நீர்ப்பாசன தேவைக்காக சூரிய ஒளியில் மின்சாரத்தை பெறும்இயந்திரங்களையும் மானிய விலையில் வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், அச்சுவேலிப்பகுதியில் தெங்கு நாற்றுமேடை அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சரின் இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும். இதேபோல் குடாநாட்டிலும் வன்னியிலும் பெருமளவு நாற்றுமேடைகள் அமைக்கப்பட வேண்டும்.

வடமாகாணத்தில் வடபிராந்திய தெற்குப் பயிர்ச்செய்கை காரியாலயம் நிரந்தர கட்டடமின்றி தற்காலிக கட்டடத்திலேயே செயற்பட்டு வருகின்றது.

தெங்கு அபிவிருத்தி காரியாலயங்கள் வடக்கில் பல பகுதிகளில் அமைக்கப்படவில்லை. குறிப்பாக யுத்தத்தில் பெரும் பாதிப்புக்களை சந்தித்த முல்லைத்தீவில் தெங்கு அபிவிருத்தி காரியாலயமோ உத்தியோகத்தர்களோ இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே, இதுகுறித்து அமைச்சர் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும். தெங்கு அபிவிருத்தி அமைச்சர் வடமாகாணத்திற்கு உரிய சேவைகளை மேற்கொள்வார் என நம்புகின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் பூரணை தினங்கள் தோறும் நடத்தும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடை பெறவுள்ளது.

ஆச்சிரம பூசையும் அதனைத் தொடர்ந்து தினமும் நடைபெற்றுவரும் திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து ஆச்சிரம ஆதீன கர்த்தா ஸ்ரீ மோகன் சுவாமிகளின் ஆசியோடு மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளது என அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (2)

## அமைச்சரவை தீர்மானங்களின் அறிக்கை அடுத்த ஆண்டிலிருந்து தமிழிலும்

## கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சரவை தீர்மானங்கள் அடங்கிய ஊடக அறிக்கைகள் தமிழில் மொழி பெயர் க்கப்பட்டு வழங்கப்படாமை தெடர்பில் ஊடக வியலாளர்களிடம் மன்னிப்புக் கோரிய அமை ச்சர் கெஹலிய ரம்புக்வெல எதிர்வரும் ஜன வரி மாதத்திலிருந்து அவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்படும் என்றும் குறிப் பிட்டார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன் தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன் போது ஊடகவியலாளர் மாநாடு ஆரம்பிக்கப்படு முன்னர் அமைச்சரவை தீர்மான விபரங்கள் அடங்கிய ஊடக அறிக் கைகள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் ஊடகங்கவியலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இதனையடுத்து அமைச்சரவை தீர்மான ங்கள் தொடர்பில் கேள்விகள் இருப்பின் கேட்குமாறு அமைச்சரவை பேச்சாளரும் அமைச் சருமான கெஹெலிய ரம்புக்வெல ஊடகவியலாளர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அப்போது அமைச்சரவை தீர்மான விடய ங்கள் அடங்கிய ஊடக அறிக்கைகள் ஏன் தமிழ் மொழியில் வழங்கப்படுவதில்லை என்று ஊடகவியாலாளர் ஒருவர் கேள்வியெழுப் பினார்.

அந்தக் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அமைச்சரவை தீர்மானங்கள் அடங்கிய ஊடக அறிக்கைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்படாமை தொடர்பில் உங்களிடம் நான் மன்னிப்பு கோருகின்றேன். உண்மை யில் இந்த விடயம் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

மும்மொழி வேலைத்திட்டம் என்பது அர சாங்கத்தின் கொள்கையாகும். அரசாங்கத் தின் கொள்கை அவ்வாறு இருக்கையில், இவ்வாறு அமைச்சரவை தீர்மானங்கள் அட ங்கிய ஊடக அறிக்கைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்படாமை தவறான விடயமாகும்.

எனவே, இது தொடர்பில் கவலையடை கின்றேன் என்பதுடன் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து ஊடக அறிக்கைகள் தமிழில் வழங்கப்படும் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன் என்றார். (2)

## தனியார் கல்வி நிறுவனங்களின் ஊதுகுழலே உயர் கல்வியமைச்சு

### பல்கலை.ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

இலங்கையின் உயர் கல்வி அமைச்சானது அரசாங்க உயர் கல்வி அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துமெனவே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உயர் கல்வி அமைச்சு தனியார் கல்வி நிறுவனங்களின் ஊதுகுழலாகி விட்டது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

அரசாங்க கல்வித்துறையை விட தனியார் கல்வித் துறைக்கே உயர்கல்வி அமைச்சு முன்னுரிமை வழங்குகின்றது எனவும் இது உயர் கல்வித்துறைக்கு பாரிய அச்சுறுத்தலை தோற்றுவிக்கலாம் எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் நிர்மல் தேவசிறி தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்களை பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்மேளனம் எதிர்க்கவில்லை. ஆனால், அரசாங்க பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசாங்கம் உதாசீனம் செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க செலவீனத்தில் உயர் கல்விக்கான ஒதுக்கீட்டை 1.9 சதவீத்திலிருந்து 6 சதவீதமாக அதிகரிக்கும்படி நாம் கூறினோம். ஆனால், உயர் கல்வியமைச்சு எவ்வித நடவடிக்கையும் செய்யவில்லை.

அரசாங்க கல்வி முறைமைக்கு தனியார் கல்வி முறைமை அச்சுறுத்தலாக அமையும். பிரிட்டன் போன்ற நாடுகளில் இதுதான் நடந்தது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி ஒரு வியாபார பண்டமாகும் போது அரசாங்க கல்வி முறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. உள்ளங்களைப் பண்படுத்தும் கலைத்துறைப் பாடங்கள் இலாபமற்றவை எனக்கருதப்பட்டு கைவிடப்படும் என தெரிவித்துள்ளார். (2)

## தொண்டமான் தலைமையிலான குழுவினர் வவுனியா விஜயம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவொன்று வவுனியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாக பிரதிப் பொருளாதார அமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

கால்நடை வள அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரு மான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினரே நாளை மறுதினம் திங்கட்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

30 ஆண்டுகளாக நீடித்த போர் காரணமாக இடப்பெயர்வு போன்ற பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் வன்னியில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களின் நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் இந்த விஜயம் அமையவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 40ஆண்டுகளாக வவுனியாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயமொன்று இயங்கி வருவதாகவும் அதனை மையமாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

# இனிமேல் பாருங்கள் எனது அரசியலை!

## கனிமொழி வைராக்கிய பேட்டி

டிசம்பர் மூன்றாம் தேதி சென்னை விமான நிலைத்துக்குள் நுழைந்தவர்கள், "வழி தவறி அண்ணா அறிவாலயத்துக்குள் நுழைந்து விட்



டோமோ... " என்று ஒரு கணம் குழம்பியிருப்பார்கள். 193 நாட்கள் திகார் சிறைவாசகத்துக்குப்பிறகு, கனிமொழி சென்னை திரும்பிய தினம் அது!

"கனியக்கா எத்தனை மணிக்கு வர்றாங்க? ஃப்ளைட் வந்துடுச்சா?" என்று எதிர்ப்பட்டோரிடம் எல்லாம் விசாரித்தபடி அலைந்து கொண்டு இருந்தார்கள் பாசக்கார உடன் பிறப்புக்கள். சென்னை சங்கமம் புகழ் இசைக்கலைஞர்களின் டங்குணக்க டங்குணக்க மேளதாளங்கள் அதிரத்துவங்க, தொண்டர்களோடு மகளிர் அணியினரும் சேர்ந்து ஆடியது அக்மார்க் குத் தாட்டம்!

சரியாக மதியம் 12.20 க்கு தயாளு அம்மாளுடன் மு.க.ஸ்டாலின் விமான நிலையம் வந்தார். பெங்களூரில் இருந்து வந்திருந்த செல்வி தனது கணவர் செல்வத்துடன் வர, மு.க.தமிழரசு தன் மனைவி மோகனாவுடன் நுழைந்தார். சற்று நேரத்தில் கருணாநிதியுடன் ராஜாத்தி அம்மால் வந்தார். அவர்களை ஜே.கே.ரித்தீஷ் கும்பிடு போட்டு



வரவேற்றார். இதற்குள் தொண்டர்களின் கட்டுக்கடங்காத கூட்டத்தால் திமிற ஆரம்பித்தது விமான நிலைய வளாகம்.

குடும்ப உறுப்பினர்கள் மட்டும் விமான நிலைய வரவேற்பறையில் காத்திருக்கிறார்கள். "கனிவர இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்? " என்று கருணாநிதி கேட்க... "ஒன்றரை மணிக்கு வரும் ஃப்ளைட்" என்று சொல்லி இருக்கிறார்கள். அப்போது குடும்ப உறுப்பினர்களைப் பார்த்து கருணாநிதி, "கனி ஜெயில்ல ரொம்பவே கஷ்டப் பட்டிருச்சு. தொண்டர்களும் ரொம்ப எதிர்பார்ப்பு வெச்சிருக்காங்க. கனிக்கு முக்கியப் பொறுப்பு கொடுக்கணும் " என்று ஆரம்பிக்க... "அதைப்பத்தி உடனே ஏன் பேசணும்? என்று விவகாரத்தைச் சற்றுத்தள்ளி வைத்தாராம் ஸ்டாலின்.

ஜெட் ஏர்வேஸ் விமானம் தரை இறங்கியதும் வரவேற்பு அறையில் இருந்து வெளியே வந்தார் கருணாநிதி. மகன் ஆதித்யா, கணவர் அரவிந்தன் சகிதம் சிரித்த முகத்தோடு வந்த கனியைப் பார்த்ததும், கருணாநிதியின் கண்களில் இருந்து கரகரவென வழிந்தது நீர். கனிமொழியை அருகில் வரச்சொல்லி அணைத்து, நெற்றியில் முத்தம் கொடுக்க... தயாளு அம்மாளும் கனியைக் கட்டி அணைத்துக் கொண்டார். ஓரிரு நிமிடங்கள் அங்கு நிலவியது கனத்த அமைதி. அதை கலைத்தது ஆதித்யாதான். "அதான்... அம்மா வந்துட்டாங்கள்ல... அப்புறம் ஏன் அழறீங்க தாத்தா?" என்றபடி கன்னத்தில் வழிந்த கண்ணீரைத்



துடைக்க... நெகிழ்ந்து விட்டார் கருணாநிதி. கட்சியினர் அளித்த பூங்கொத்துக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொண்டு கருணாநிதியுடன் வெளியே வந்தார் கனிமொழி.

"கனியக்கா...கனியக்கா என்று உணர்ச்சிமிகுதியில் முண்டியடித்து முன்னேறிய கூட்டத்தைப் பார்த்ததும் கனிமொழி முகத்தில் உற்சாக சந்தோஷம். விமான நிலையத்தில் இருந்து சி.ஐ.டி.காலனி செல்லும் வழியெங்கும் கனிமொழியை வாழ்த்தி ஏகப்பட்ட விளம்பரத் தட்டிகள்.

"இனி நீ பூங்கொடி அல்ல; போர்கொடி,ஏழைகளின் தோழி நீ... எழுச்சி சூரியனாய் வாழி நீ," "பூட்டிய




இரும்புக்கூட்டின் கதவு திறந்தது... அதிகாரக்கூட்டத்தின் கனவு கலைந்தது" என்றெல்லாம் ஏகத்துக்கும் வாழ்த்து மழை!

கூண்டுக்குள் இருந்து கிளி வெளியே வருவது போல் வரையப்பட்ட படத்துடன் "சிறைபட்டது நீ... வதைபட்டது நாங்கள்!" என்று எழுதப்பட்ட பனர் கனிமொழியின் வீட்டுக்கு எதிரே பிரமாண்டமாகப் படபடத்தது. வீட்டு வாசலின்முன் போடப்பட்டிருந்த பிராமாண்ட கோலத்தின் நடுவே வெல்கம் என்ற வரவேற்பு வாசகம்!



ஆரத்திகள், கற்பூரதீபம், திருஷ்டிப் பூசனிக்காய் சுற்றல், வைபவங்கள் முடிந்து கார் வீட்டுக்குள் நுழைந்து நின்ற போது கார் கதவைத் திறக்க முடியாத அளவுக்கு கூட்டம். பேராசிரியர் அன்பழகன், ஆற்காட்டார், கோ.சி.மணி போன்றவர்கள் கனி மொழிக்கு சால்வை போர்த்த, வீட்டில் இருந்த உறவுகள் ஆரத்தி எடுக்க கனிமொழியின் நெற்றியில் பொட்டு வைத்தனர். மற்றவர்கள் தன்னை "எப்படி இருக்கீங்க? " என்று கேட்பதற்கு முன்னரே "எப்படி இருக்கீங்க?" என்று முந்திக் கொண்டு அவர்களை விசாரித்தார் கனிமொழி. வீட்டு வளாகத்துக்குள் குடியிருந்த தொண்டர்களுக்கு சரவணபவன் விருந்து. வீட்டுக்குள் மீன் குழம்பு மணம் கமகமத்தது.. சமையல் தயாராகி கனிமொழியைச் சாப்பிட வருமாறு ராஜாத்தி அம்மாள் அழைக்க... "வாய்க்கு ருசியா சாப்பிட்டு ரொம்ப நாளாகியிருக்கும். என் கையால், சாப்பிடும்மா! " என்று கருணா நிதி சோறு எடுத்து கனி மொழிக்கு ஊட்ட... "நீங்களும் என் கையால சாப்பிட்டு எத்தனை நாளாச்சு! என்று கனியும் அப் பாவுக்குச் சோறு ஊட்டினார்.



சி.ஐ.டி. காலனி இல்லம் இதற்கு முன் இப்படி ஒரு கொண்டாட்டத்தை எதிர்கொண்டதில்லை.

## தமிழகப் பார்வை

சிறைப்பட்ட நாட்களின் வருத்தங்களை அந்த ஒரேநாளிலேயே மறக்கும் அளவுக்கு இருந்தது சந்தோஷப் பரவசம். ஆனாலும், கனிமொழி முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. கிடைத்த சிறுசிறு இடைவேளைகளில் அவரிடம் பேசியதில் இருந்து....

"எப்படி இருக்கீங்க? "

"பழைய பலம் திரும்பிய மாதிரி இருக்கு. எப்பவும் உணராத உற்சாகமும் புத்துணர்ச்சியும் என்னைத் திக்குமுக்காட வைக்குது. விமான நிலையத்திற்கே தொண்டர்கள் திரண்டுவந்து வரவேற்று மகிழ்ந்ததைப் பார்த்தபோது நெகிழ்ந்து விட்டேன். பேராசிரியரும் ஆற்காட்டாரும் வீட்டுக்கே வந்து என்னை வாழ்த்தியது... நானே எதிர்பார்க்காத இன்ப அதிர்ச்சி. என் வலியைவிடப் பெரிய ஆறுதல் இதெல்லாம்! "

"சிறைக்குச் செல்லும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டதே... என்று அரசியல் மீது வெறுப்பு வரவில்லையா? "

"என்னை அரசியலுக்குக் கை பிடித்து அழைத்து வந்தவர் தலைவர் தான். அரசியலில் தலைவர் சந்திக்காத சோதனைகளே இல்லை. அந்தச் சோதனைகளை எல்லாம் போர்க் குணத்தோடு எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார். தலைவரிடம் இருக்கும் தைரியம் போர்க் குணம் எனக்கும் உண்டு. நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. தவறான பழி என்மீது விழுந்து விட்டது. அதிலிருந்து மீண்டு நான் நிரபராதி என்பதை நீதி மன்றத்தில் நிரூபிப்பேன். அரசியல் மீது எனக்கு வெறுப்புக் கிடையாது. இனிமேல் பாருங்கள் எனது அரசியலை. தலைவர் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நான் தொடர்ந்து தீவிர அரசியலில்தான் இருப்பேன். என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் தொண்டர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப செயற்படுவேன்!" என்று உறுதிமிக்க குரலில் பேசி முடித்துக் கைகளைக் கூப்புகிறார்!

# பல்கலை.களின் பகிடிவதைகளை ஓரிரு நாட்களில் நிறுத்த முடியாது

## உயர்கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை ஓரிரு நாட்களில் நிறுத்திவிட முடியாது. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது பல்கலைக்கழகங்களில் பகிடிவதைகள் குறைவடைந்துள்ளதைக் காண முடிகின்றது. எனினும் ஒருசில சம்பங்கள் இடம்பெற்று வருவதை மறுக்க முடியாது.

குறிப்பாக இரவு நேரங்களில் மாணவர்கள் தங்கியிருக்கும் அறைகளிலே இத்தகைய பகிடிவதைகள் இடம்பெறுகின்றன என்று உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ண தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்கள் பெரும்பாலும் தகாத வார்த்தைகளையே பயன்படுத்துகின்றனர். எனினும் இதனால் பாதிக்கப்படுவோர் பகிடிவதை செய்பவர்களைக் காட்டிக்கொடுப்பதில்லை. எவ்வாறாயினும் பகிடிவதைகளை உடனே நிறுத்திவிட முடியாது.

இவை போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க அமைச்சர் திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். பகிடிவதை செய்யும் மாணவர்கள் இனங்காணப்பட்டால் அவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து நிறுத்தப்படுவார்கள்.

மேலும் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைச் சம்பங்களை முற்றாக இல்லாதொழிக்க இன்னும் மூன்று நான்கு வருடங்கள் தேவைப்படும் என்றார். (2)

# ஐ.தே.க.தலைமைக்கு தகுதியற்றவர் கருஜயசூரிய

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு போட்டியிடக் கரு ஜயசூரியவுக்கு தகுதியில்லை. எனவே கருஜயசூரிய போட்டியிலிருந்து விலகிக் கொள்வதே நாகரிகமானது என்று ஐ.தே.க.வின் சிரேஷ்ட உறுப்பினரும் எம்.பி.யுமான ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொறளையில் ஜோன் அமரதுங்கவின் இல்லத்தில் நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

2007 ஆம் ஆண்டு கட்சியிலிருந்து 16 பேருடன் ஆளும் தரப்புக்குத் தாவி ஐ.தே.கவுக்கு பாரிய துரோகம் இழைத்தார். மீண்டும் அவர் இணைகையில் கூட்டிச் சென்றவர்களில் ஒருவரைக்கூட அழைத்துவர முடியவில்லை.

அதுமட்டுமன்றி கட்சியின் செயற்குழுவுக்கும் தலைமைத்துவத்துக்கும் அளித்த வாக்குறுதிகளையும் கரு ஜயசூரிய மீறியுள்ளார் என்றும் அவர் குற்றம் சுமத்தினார். (2)

# பல்கலை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது

பல்கலைக்கழகங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோரின் கோரிக்கைகளை நாம் இனி கவனத்தில் கொள்ளப் போவதில்லை என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளதாக அமைச்சின் செயலாளர்நவரட்ண தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் அவர்களது பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பினால் அவர்கள் அது தொடர்பில் எமக்கு எழுதலாம். அல்லது தொலைபேசி மூலம் அறிவிக்கலாம். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் மேற்படி நடவடிக்கையினை எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்கலைக்கழகங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றுகூடி நடத்திய பெரும் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து இனி மேல் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமாயின் மாணவர்களின் குறைபாடுகளைப்பற்றி பல்கலைக்கழக மாணவ அமைப்புக்களுடன் மாணவர்களின் உயர் கல்வியைப் பற்றி பேச மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம் மற்றும் றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக மானிய குழுவின் முன் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர உபவேந்தர் துஸ்பிரயோகம், ஊழல் ஆகியவற்றில் ஈடுபட்டதாக கூறப்பட்டு அவரை பதவியிலிருந்து அகற்றுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# 2011.12 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1041-பைசண்டைன் பேரரசி சோயி தனது வளர்ப்பு மகனை ஐந்தாம் மைக்கல் என்ற பெயரில் பேரரசனாக்கினாள்.

★ 1541-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் மனைவியும் அரசியுமான கத்தரீனுடன் தகாத உறவு வைத்திருந்தமைக்காக தோமஸ் கல்பெப்பர்ம் பிரான்சிஸ் டெரெகம் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1655-யாழ்ப்பாண ஆளுநர் அன்டோனியோ டி மெனேசா மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் என்னும் இடத்தில் சிறை பிடிக்கப்பட்டார்.

★ 1684-ஐசாக் நியூட்டன் தனது புவியீர்ப்பு விதிகளின் கொள்கைகளில் எழுதிய கெப்லரின் விதிகளின் தீர்வுகள் ரோயல் சபையில் படிக்கப்பட்டது.

★ 1807-சென்னையில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1817-மிசிசிப்பி ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1868-உலகின் முதலாவது சமிக்ஞை விளக்குகள் லண்டனில் நாடாளுமன்றுக்கு வெளியே நிறுவப்பட்டன.

★ 1898-ஸ்பெயின் அமெரிக்கா போர் நிறுத்த உடன்பாடு பாரிசில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1901-முதலாவது நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

★ 1902-அஸ்வான் அணை திறக்கப்பட்டது.

★ 1902-தாஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ 1906-அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரோசவெல்ட் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். இது ஒரு அமெரிக்கர் பெற்ற முதலாவது நோபல் பரிசாகும்.

★ 1936-இங்கிலாந்தின் எட்டாம் எட்வேர்ட் மன்னன் முடி துறப்பதாக அறிவித்தான்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: மலாயாவுக்குக் கிட்டவாக ஐக்கிய இராச்சியத்தின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் ஜப்பானியர்களால் மூழ்கடிக்கப்பட்டன.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பிலிப்பைன்சை அடைந்தனர்.

★ 1948-மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாள் ஆக அறிவிக்கப்பட்டது.

★ 1975-ரஷ்யரான அந்திரேய் சாக ரொவ் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

★ 1981-தெற்காசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்க பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐ.நா. பொது அவை ஏற்றுக் கொண்டது.

★ 1984-தென்னாபிரிக்க கறுப்பின மதகுரு டெஸ்மண்ட் டூட்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.

★ 1989-மங்கோலியா கம்யூனிசத்தில் இருந்து மக்களாட்சிக்கு அமைதியாக மாற்றம் பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1750-திப்பு சுல்தான், மைசூர் இராச்சியத்தின் மன்னன் (இ.1799)

★ 1804-ஜேகோபி, ஜேர்மனிய கணித மேதை (இ.1851)

★ 1851-மெல்வில் டியூவி, அமெரிக்கர் , நூலக அறிவியலை வளர்த்தவர் (இ.1931)

★ 1878-ராஜாஜி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சுதந்திர இந்தியாவின் முதலாவது ஆளுநர் (இ.1972)

★ 1891-நெல்லி சாக்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1970)

★ 1934-ஹவர்டு மார்டின் டெமின், அமெரிக்கா வைரசுகளைப் பற்றிய ஆராய்ச்சிக்காக 1975 இல் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.1931)

### இறப்புக்கள்

★ 1896-அல்பிரட் நோபல், சுவீடனைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர் (பி.1833)

★ 1960- சேர் சிற்றம்பலம் கார்டினர்

★ 1987-சுப்பிரமண்ய ராஜு, தமிழ் எழுத்தாளர் (பி.1948)

★ 2001-அசோக்குமார், இந்திய நடிகர் (பி.1911)

★ 2006-ஆகுஸ்டோ பினோச்சே, சிலி நாட்டு சர்வாதிகாரி (பி.1915)

### சிறப்பு நாட்கள்

★ நோபல் பரிசு அளிக்கும் வைபவம்

★ தாய்லாந்து -அரசியலமைப்பு தினம் (1932)



★ மனித உரிமைகள் தினம்

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பதிவற்ற பாடசாலை வான்களுக்கு தடை

பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வான்கள் தொடர்பாக புதிய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் பதிவு செய்யப்படாத வான்களில் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதை தடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித் தலைவர் சந்திரா இந்திரவங்ச கூறியுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வான்களை பதிவு செய்யும் நடவடிக்கை கொழும்பு, களுத்துறை, காலி உள்ளிட்ட சில மாவட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# பால்மாவிற்குள் ஹெரோயின் வைத்து சிறைச்சாலைக்கு கடத்தியவர் கைது

கண்டி போகம்பறை சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

பால்மா பக்கெற் ஒன்றினுள் சூட்சுமமான முறையில் மறைத்து சந்தேக நபர் சிறைச்சாலைக்குள் போதைப் பொருளை கொண்டு செல்ல முயற்சித்துள்ளதாக மத்திய மாகாண பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த நபரை சோதனையிட்டபோது பால்மா பக்கெற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் மாகாண பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபரிடமிருந்து 3.9 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர் கலேவெல பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது. (2)

# பழுதடைந்த பால்மா கலப்படமாகி விற்பனை

## பிரதி கால்நடை அமைச்சர்

தனியார் நிறுவனங்கள் சில தமது உற்பத்திகளில் பழுதடைந்த பால்மாவுடன் ஐதரசன் பெறொக்சைட்டைக் கலந்து விற்பனை செய்வதாகவும் இதனால் பாவனையாளர்களுக்கு சுகாதார அபாயம் தோன்றும் சாத்தியமுள்ளதாகவும் பிரதி கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எச்.ஆர். மித்திரபால பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தனியார் துறைகளில் இது தொடர்பான விசாரணைகளைத் தமது அமைச்சு முன்னெடுத்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் அவர் இது தொடர்பில் பாராளுமன்றில் கூறுகையில், பழுதடைந்து அல்லது புளித்துப்போன பாலை நாம் கால்நடை வளர்ப்போரிடமிருந்து கொள்வனவு செய்வது கிடையாது. எனினும் சில தனியார் கம்பனிகள் அவற்றைக் கொள்வனவு செய்து ஐதரசன் பெறொக்சைட்டை கலக்கின்றன.

அவை சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிப்பன. அவ்வாறான உற்பத்திகளைக் கொள்வனவு செய்வது சுகாதாரத்துக்கு நன்மை பயப்பவையல்ல. இது தொடர்பில் நாம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார். எனினும் குறித்த கம்பனியினர் தொடர்பான பெயர் விபரங்களை அவர் கூறவில்லை.

கால்நடை வளர்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் 3000 கால்நடைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் அதன் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இவை கொள்வனவு செய்யப்படும் ,என்றார். (2)

# ஆனையிறவு உப்பளம் அரச நிறுவனமாக்கப்படும்

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் முழுமையாக அரசாங்கத்தின் நிறுவனமாக நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்காக அரசாங்கம் சார்பில் கம்பனி ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். மேலும் சில அமைச்சரவைத் தீர்மானங்கள் வருமாறு,

மீன்பிடிக்காக கடலுக்கு செல்லும் படகுகளை கண்காணிக்கும் தொகுதி ஒன்று நிறுவப்படவுள்ளது. இலங்கையர்களின் 3ஆயிரம் படகுகள் சர்வதேச கடலிலும் இந்து சமுத்திரத்திலும் மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

அதன்படி இந்த திட்டம் கொண்டுவரப்படும். அமைச்சர் ராஜித சேனாரட்ண இந்த அமைச்சரவைப்பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்ட மூலம் திருத்தியமைக்கப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இளைஞர் படையணி அதிகாரசபை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. கட்டார் அரசாங்கத்துடனான பொருளாதார மற்றும் கலாசார ஒத்தழைப்பு தொடர்பில் செயற்படுவதற்காக உயர்மட்ட கூட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. தேசிய வீதிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தப்படும் வேலைத்திட்டத்துக்காக பிரான்ஸ் 22 மில்லியன் யூரோக்களை வழங்கவுள்ளது. (2)


பிள்ளையார் துணைகொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம்,
இடர்கள் நீங்கி மகிழ்ச்சி பெற

வாழும் கலை

**யாழ்-மக்களுக்கு ஓர் அரிய தரிசனம்**

பிள்ளையார் கதையை முன்னிட்டு

**வாழும் கலை அமைப்பின் சார்பாக** யாழ். மண்ணில் முதன் முறையாக

**25 அடி உயர மகா கணபதி உருவச்சிலை**

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

*உலக அமைதி வேண்டி மகா கணபதிஹோமம் மற்றும் சிறப்புப் பூஜைகள் தினமும் இடம்பெறவுள்ளது .இந்த ஆன்மீக வைபவத்தில் அனைத்து மக்களும் தவறாது கலந்து அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

11.12.2011 ஞாயிற்றுக்கிழமை கணபதிஹோமம்
காலை 6.00 மணி-7.30 மணி

காலம்:- டிசெம்பர் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஜனவரி 09 ஆம் திகதி திங்கட்கிழமை வரை
இடம்:- குமாரசாமி மண்டபம், யாழ்.இந்துக்கல்லூரி
நேரம்:- காலை 8.00மணி முதல் 8.45 மணிவரை
மாலை 5.00 மணி முதல் 6.30 மணிவரை
சங்கல்பபூஜை செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
T.P:- 0777740593, 0770474757
(இ)



**நர்த்தனஷேத்திரா**
NARTHANASHETHRA
(School of Dance)

**யாழ்ப்பாணத்தில் முன்னணி அவைக்காற்றுகைக் கலைஞர்கள் வழங்கும் மார்கழி மகோற்சவம்**

இடம்: கலைத்தூது கலையரங்கம் திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்.
காலம்: 2011.12.11. காலை 9.30 மணிக்கு


**நிகழ்ச்சி நிரல்**

1) நிருத்தியார்ப்பணம்
செல்வி.ரஜிதா சின்னத்துரை — திருமதி.அனுஷாந்தி சுகிர்தராஜ்
திரு.லிங்கராசா அனிருத்தன் — திரு.மகேந்திரன் தபேந்திரன்
திரு. கனகரத்தினம் மனோரஞ்சன் — திரு. செல்லத்துரை ஸ்ரீகண்ணன்
செல்வி பவித்திரா தயாபரன்
2) திருமதி.பத்மினி செல்வேந்திரகுமார் தயாரிப்பில் உரும்பிராயில் கலைக் கோயில் வழங்கும் கீதோ உபதேசம் ஆடற்கதை.
3) நர்த்தன ஷேத்திரா தயாரிப்பில் சீதா ராமன் நடன நாடகம்.

நுழைவு கட்டணம்: ரூபா 200/- ,100/-
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நர்த்தனஷேத்திரா இயக்குநர்.




# ஆப்கானில் இடம்பெற்ற தாக்குதலுக்கு ஐ.நா.பொதுச் செயலாளர் கண்டனம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இரு வழிபாட்டு தலங்களில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 64 பேர் கொல்லப்பட்டதற்கு ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஒரு மசூதியில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர் நடத்திய தாக்குதலில் நேற்று முன்தினம் 60 பேர் கொல்லப்பட்டனர்.

இதே போல் மார் இ ஷெலீப் என்ற நகரில் ஒரு மத வழிபாட்டு தலத்தில் நடந்த வெடி குண்டு தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல்களுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த இரு தாக்குதல்களும் இஸ்லாமியர்களின் மொஹறம் பண்டிகையின் போது நடத்தப்பட்டுள்ளது.

அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப்படும் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு தான் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும் காயம் அடைந்தவர்களுக்கும் தான் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இந்த தகவலை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் உள்ள பான் கீ மூனின் செய்தி தொடர்பாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

இதேபோல ஆப்கானிஸ்தானில் உள்ள ஐ.நா. தூதுக்குழு அலுவலகமும் இந்த தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. (2)

# நேட்டோவின் பாரவூர்திகள் பாகிஸ்தானில் தாக்கப்பட்டன

(லாகூர்)

பாகிஸ்தானில் மர்ம நபர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதில் நேட்டோ படைகளின் 20 டேங்கர் லொறிகள் வெடித்து சிதறின. பாகிஸ்தான் பழங்குடியின பகுதிகளில் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் தாக்குதல் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம் குவெட்டா நகரில் நேட்டோ படைகளுக்கு பெற்றோல், டீசல் விநியோகம் செய்யும் பணிமனை உள்ளது.

இங்கிருந்துதான் பாகிஸ்தானின் ஏனைய நகரங்களுக்கும் ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கும் எரிபொருள் விநியோகம் செய்யப்படுகிறது.

இந்நிலையில் மர்ம நபர்கள் நேற்று முன்தினம் நேட்டோ பணிமனை மீது சரமாறியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். அத்துடன் ஏவுகணைகள் மற்றும் வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர். இதில் 20 டேங்கர் லொறிகள் வெடித்து சிதறின.

இது குறித்து பொலிஸ் உயரதிகாரி மாலிக் அர்ஷத் கூறுகையில், தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை. இது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது. (2)

# சீனாவின் கடல் மேம்பாலத்திட்டம் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது

சீனாவில் நடைபெற்று வரும் ரூபா 60 ஆயிரம் கோடி மதிப்பிலான கடல் மேம்பாலங்கள் அமைக்கும் மெகா திட்டம் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது.

சீனாவின் கொங்கொங் மகாவ் ஷ் ஹாய் நகரங்களை மேம்பாலங்கள் மூலம் இணைக்கும் திட்டம் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடங்கியது.

இதை நிறைவேற்றுவதற்காக மூன்று இலட்சம் சதுர மீற்றர் செயற்கையான தீவு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதற்காக இராட்சத எஃகு தூண்கள் கடல் பகுதியில் நிறுவப்பட்டு வருகின்றன. இதில் கடைசியாக 59 எஃகு தூண்கள் கடந்த புதன் கிழமை காலை கடலில் சொருகப்பட்டன இந்தத் தூண்களில் மணலும் கற்களும் கொட்டப்பட்டு நிரப்பப்பட்டால் தீவு அமைந்துவிடும். இத்திட்டம் முழுவதும் நிறைவேற்றப்பட்டால் உலகின் மிகப் பெரிய கடல் மேம்பாலமாக இது அமையும்.

மொத்தம் 29.6 கிலோ மீற்றர் நீளமுடைய இந்த திட்டத்தில் கடலுக்கடியில் 6 கிலோ மீற்றர் நீளத்தில் சுரங்கப்பாதை அமையவுள்ளது. இந்த மெகா திட்டம் 2016 இல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (2)


# அமெரிக்க முன்னாள் ஆளுநருக்கு ஊழல் வழக்கில் சிறைத்தண்டனை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ராட் பிளாகோஜெவிசுக்கு ஊழல் வழக்கில் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இல்லினாய்ஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த போது ஊழல் செய்ததாக பிளாகோஜெவிச் மீது 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வகித்த செனட் பதவியை ஏலம் விட்டு அதை பிரசார செலவுக்கும் சொந்த நலனுக்கும் பயன்படுத்த முயற்சித்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஊழல் வழக்கில் தண்டனை அளிக்கப்பட்டுள்ள இரண்டாவது அமெரிக்க ஆளுநர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பாக ஜார்ஸ் ரியான் என்ற ஆளுநருக்கு ஆறரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (2)






மியன்மாரில் 100 ஆண்டு பழமையான செயின்ட் தேவாலயத்தின் தின விழாவில் பங்கேற்க வந்த அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங்சூகியை படத்தில் காணலாம்

# எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பிற்கு கனடாவும் அமெரிக்காவும் ஒப்பந்தம்

கனடா மற்றும் அமெரிக்காவின் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தவும் தீவிரவாதிகள் ஊடுருவுவதை தடுக்கவும் புதிய ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

கனடாவின் பிரதமரான ஸ்டீபன் ஹார்பரும் அமெரிக்காவின் ஜனாதிபதியுமான பராக் ஒபாமாவும் வோஷிங்டனில் 45 நிமிடங்கள் சந்தித்து பேசினர். அப்போது கனடா- அமெரிக்காவின் எல்லைப் பகுதியில் பாது காப்பை பலப்படுத்தவும் பயணத்தை விரைவு படுத்தவும் திட்டம் ஒன்று கையெழுத்தானது. 62 விடயங்களை கொண்ட இச் செயற் றிட்டம் இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் பயணிகளின் நுழைவுத் தகவலை 2014 ஆம் ஆண்டு வரை பரிமாறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஹார்பருக்கு இன்னும் பல வருடங்கள் ஆட்சியதிகாரம் இருந்தாலும் ஒபாமாவுக்கு தேர்தல் நெருங்கி வருவதால் இத்திட்டம் அவர் ஆட்சியில் நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகத்திற்கு இடமாக உள்ளது.

இரண்டு நாடுகளின் அரசியலுரிமை மற்றும் சட்ட அமைப்புகளுக்கு உட்பட்டு எல்லையோரப் பயணிகளின் தகவல் பரிமாற்றங்கள் அமையும்.பயணம்தவிரவணிகமும் செழிப்படையும் வகையில் இச்செயல்திட்டத்தில் 29 அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

உணவு, வேளாண்மை, போக்குவரத்து போன்றவையும் இந்த 29 அம்சங்களில் இடம் பெற்றுள்ளன. எல்லையின் இரு பக்கமும் தொழில் நடத்தவும் உற்பத்தி செய்யவும் இச்செயல்திட்டம் எளிமையான அணுகுமுறையை அறிமுகப்படுத்தி இருப்பதாக ஹார்பர் தெரிவித்துள்ளார். (2)

# பாலஸ்தீனமும் இஸ்ரேலும் பதிலுக்குப் பதில் தாக்குதல்

பாலஸ்தீனத்தின் காஷா திட்டுப் பகுதி ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவர்கள் அங்கிருந்தபடியே இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலாக இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் தெற்கு காஷாவில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது.

அதில் ஒருவர் கூட பலியாகவில்லை. அதே நேரத்தில் ஒரு ஏவுகணை மட்டும் மக்கள் குடியிருப்பு பகுதியில் விழுந்து தாக்கியதில் ஒரு வீடு மட்டும் தீப்பிடித்து எரிந்தது.

அதில் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் பலியானார். மேலும் 25 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த தகவலை பாலஸ்தீனத்தின் சுகாதார துறை அதிகாரி ஆதம் அபு சல்மியா தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் காஷா பகுதி மீது இஸ்ரேல் இராணுவம் ஏவுகணை வீசி தாக்கியதில் 2 தீவிரவாதிகள் பலியானதாகவும் 5 பேர் காயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (2)

# கனடாவின் காங்கோ தூதரக வன்முறை முடிபுக்கு வந்தது

கனடாவின் ஒட்டாவோ மாகாணத்தில் உள்ள காங்கோ தூதரகத்தில் எதிர்ப்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட வன்முறை முடிவுக்கு வந்தது.

ஒட்டாவோ நகரில் நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் காங்கோ தூதரகம் முன் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சிறிது நேரத்தில் அந்த வன்முறை போராட்டமாக வெடித்தது. எதிர்ப்பாளர்கள் பொலிஸார் மீது கல்லெறி தாக்குதல் நடத்தினர். கிட்டத்தட்ட ஆறு மணிநேர போராட்டத்திற்கு பின் வன்முறையை பொலிஸார் கட்டுப்படுத்தினர்.

ஒட்டாவோ பொலிஸார் மற்றும் கனேடியன் மவுண்ட் பொலிஸார் இணைந்து விடுத்த அறிக்கையில் கூறியதாவது,

இதுவரை கலவரத்தில் ஈடுபட்டவர்களில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (2)

# வீடமைப்பு திட்டத்தினை துரிதப்படுத்த வீடமைப்பு படையணிகள் அமைத்தல் வேண்டும்

## ஐ.தே.க.வின் எம்.பி. சஜித்



ஆறு வருடத்தில் 10 இலட்சம் வீடுகளை கட்டுவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அப்படியாயின் 1 மணி நேரத்திற்கு 16 வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று சுட்டிகாட்டிய ஐ.தே.க. வின் எம்.பியான சஜித் பிரேமதாஸ வடக்கு கிழக்கில் வீடமைப்பு திட்டத்தை துரிதப்படுத்த இரு மாகாணங்களிலும் இரண்டு வீடமைப்பு படையணிகளை அமைக்க வேண்டும் என்றும் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு எனும் திட்டத்தில் முன்மொழியப்பட்ட எந்த விடயங்களும் நிறைவேற்றப்படவில்லை. அதேபோல வீடமைப்பு திட்டத்திற்கென முன்வைக்கப்பட்ட யோசனைகள் வெறும் புத்தகத்தில் பதியப்பட்ட புள்ளி விபரங்களாகவே இருக்கின்றன.

வருடத்திற்குள் நாடளாவிய ரீதியில் 6 இலட்சம் வீடுகளும் வடக்கு கிழக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீடுகளும் பல்கலைக்கழக துறையைச் சார்ந்தோருக்கு 5 ஆயிரம் வீடுகளும் கொழும்பில்சேரிப்புற வீடுகளைக் கொண்ட 20 தொடர் மாடிகளை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தனது சிந்தனையிலும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளிலும் குறிப்பிட்டிருந்தது.

ஆறு வருடத்தில் 10 இலட்சம் வீடுகளை கட்டுவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அப்படியாயின் வருடத்திற்கு 1 இலட்சத்து 66 ஆயிரம் வீடுகளும் மணித்தியாலத்திற்கு 16 வீடுகளும் நாடளாவிய ரீதியில் கட்டப்பட வேண்டும்.வடக்கில் 50 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் உறுதியளித்தது. அதற்கென பயன்பெறுவோரில் பட்டியலைக் கேட்டிருந்தது. அந்தப் பட்டியலை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு இயலாமல் போயுள்ளது.

அந்த 50 ஆயிரம் வீடுகள் எமது மக்களின் வரிப் பணத்திலோ அரசாங்கத்தின் பணத்திலோ நிர்மாணிக்கப்படவில்லை.இந்திய அரசாங்கத்தின் பணத்திலே நிர்மாணிக்கப்படவிருக்கின்றது. அதற்காக கூட பயன்பெறும் பட்டியலை அரசு வழங்கவில்லை.

வீடமைப்பு திட்டத்தை நாடளாவிய ரீதியில் துரிதப்படுத்துவது போல வடக்கு கிழக்கிலும் துரிதப்படுத்த வேண்டும். அதற்கென இரு மாகாணத்திற்கென வீடமைப்பு படையணியை உருவாக்க வேண்டும். அதன் மூலமே வீடமைப்புத்திட்டத்தை துரிதப்படுத்தலாம்.

வீடமைப்பு திட்டம் நாடளாவிய ரீதியில் துரிதப்படுத்த வேண்டும். அதற்கு அமைச்சர் விமல் வீரவன்ச முயற்சிக்கின்றார். எனினும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானது இல்லை என்றார். (2)

## பிதிர்யக்ஞ வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் இறந்த ஜீவாத்மாக்களின் நற்கதி வேண்டி பிதிர்யக்ஞ வழிபாடு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வழிபாட்டு நிகழ்வுகள் காலை 10 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி அன்னக்காப்பு, அலங்கார பூசை, கூட்டுப் பஜனை வழிபாடு என்பன இடம் பெறவுள்ளது என ஆதீனகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ)

# சிறைச்சாலைகளின் நல்ல உணவால் சிலர் கைதியாகவே இருக்கின்றனர்

## பிரதமர் டி.எம்.ஜயரட்ன

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நல்ல உணவு வழங்கப்படுவதால் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிலர் சிறைக்கைதிகளாக இருக்க விரும்புவதாக டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சின் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சவுதி அரேபியாவில் சிறையிருப்போர் பிரம்பால் அடிக்கப்படுவது அதிகம் நடைபெறும் நிகழ்வாகவுள்ளதெனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு நாம் கடுமையான தண்டனைகளை வழங்குவதில்லை. கொடூரமான தண்டனை இல்லாத காரணத்தால்தான் நாட்டில் கூடுதலாக குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றதாவென்பதை நான் அறியேன். சிலர் எப்போதும் சிறையிலிருக்கவே விரும்புகின்றனர். சிறையில் இவர்களுக்கு உணவு கிடைக்கின்றன. அவர்கள் வெளியில் போனால் அவர் களுக்கு ஒழுங்கான உணவு கிடைக்காதெனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (2)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சமுதாய முன்னேற்ற சமூக சேவை அமைப்பினால் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்விபயிலும் 435 மாணவர்களுக்கு தலா 3ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணப் பொதி வழங்கப்படவுள்ளது.

மேற்குறித்த நிறுவனத்தால் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் இக் கற்றல் உபகரணப் பொதி வழங்கப்படவுள்ளது.

இப் பொதிகளுக்குள் பெறுமதிமிக்க புத்தகப்பை, காலணி மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன அடங்கியுள்ளன.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கே இக்கற்றல் உபகரணப் பொதி வழங்கப்படவுள்ளது. (3-15)

# மனிதஉரிமை ஆணைக்குழுவில் மொஹான் பீரிஸ் சாட்சியமளிப்பார்

(கொழும்பு)

முன்னாள் சட்டமா அதிபரும், அரசாங்கத்தின் சட்ட ஆலோசகருமான மொஹான் பீரிஸ் மனித உரிமை ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் தகவல்களை திரட்டும் நோக்கில் மனித உரிமை ஆணைக்குழு மொஹான் பீரிசிடம் விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரகீத் எக்நெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்நெலிகொட வெளிநாடு ஒன்றில் வாழ்ந்து வருவதாக மொஹான் பீரிஸ் அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் குழுக் கூட்டமொன்றில் வெளியிட்ட கருத்து தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)

# மரக்கறி,பழங்களை பிளாஸ்ரிக் பெட்டிகளிலே ஏற்றல் வேண்டும்

(கொழும்பு)

வெளி இடங்களில் இருந்து மரக்கறி மற்றும் பழ வகைகளை ஏற்றிச்செல்வது அவற்றை பிளாஸ்டிக் பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி ஏற்றிச் செல்வது நாளை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியிலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மரக்கறி மற்றும் பழங்கள் பிளாஸ்ரிக் பெட்டிகளில் ஏற்றிச்செல்லப்படவேண்டும் என கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த காலத்திற்கு வர்த்தர்கள் அதனை பழக்கத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக தண்டனைகள் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் நாளைக்குப்பின் விதிமுறைகளை மீறினால் கட்டாயம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். (2)

# பொன்சேகாவிற்கு பொதுமன்னிப்பை அவர் குடும்பத்தினர் கோரினால்

## ஜனாதிபதியுடன் ஆலோசிப்பேன்–ஹக்கீம்

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு அவரது குடும்பத்தினர் வேண்டுகோள் விடுப்பார்களாயின் தான் இது குறித்து ஜனாதிபதியிடம் ஆலோசிப்பதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவுக்கான பொதுமன்னிப்பு குறித்து ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கேட்டுக்கொண்டதனை அடுத்தே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இராணுவத்துக்கு தலைமைதாங்கிய சரத் பொன்சேகா ஓர் அரசியல் கைதி என முழு உலகமுமே கூறி வருகின்றது என்று கிரியல்ல எம்.பி. நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கிரியல்ல பேசிய போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் மன்றில் கூச்சலிட்டு குழப்பினர். அவர்கள் முன்பு கிரியல்ல எந்த முட்டாளும் யுத்தத்தை நடத்த முடியும் என கூறியதைச் சுட்டிக்காட்டி கிண்டலடித்தனர்.

அரசாங்கம் முட்டாள்தனமாக யுத்தத்தை நடத்தியதால் தான் இன்று யுத்தக் குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ளது என லக்ஷ்மன் கிரியல்ல கூறினார். அரசியில் கைதியான சரத் பொன்சேகாவை சிறையில் வைத்திருக்க சிறைச்சாலை கட்டளைச் சட்டப்படி இடமில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இதற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் ஹக்கீம், பொன்சேகாவுக்கு மன்னிப்பு பெறுவதில் கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்கு முறைகள் உள்ளன. நான் இது தொடர்பில் செயற்படுவதற்கு அவரது குடும்ப அங்கத்தினர்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அவ்வாறாக வேண்டுகோள் விடுக்கப்படுமாயின் நான் நிச்சயமாக அதை கவனத்தில் எடுப்பேன் என குறிப்பிட்டார். (2)







யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போதுவிருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும், மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் -சாளின்,என்.குமார்)

எப்படி வாழவேண்டும் என்று உனக்கு தெரிந்தால் நீ பலகாலம் வாழலாம். - லாங்ஃபெலோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வடபுலத்தவர்களின் உழைப்பு வெளியே போகிறது பாரீர்!

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜனாதிபதித் தேர்தலின்போது இரு விடயங்களை முன்வைத்தார். அதில் ஒன்று 'எங்களால் முடியும்' மற்றையது 'மாற்றத்தை ஏற்படுத்துவோம்' இவ்விரு விடயமுமே அவரை வெள்ளை மாளிகையில் அமர்த்தியது.

அமெரிக்க மக்கள் மாற்றத்தை விரும்புபவர்கள். மாற்றம் என்பது மிகவும் முக்கியமானது.

அதேநேரம் நேரான சிந்தனையும், எங்களால் முடியும் என்ற நம்பிக்கையும் வாழ்க்கையில் வெற்றி நடைபோடுவதற்கு மிகவும் அவசியமானது.

இந்த இரண்டு கருத்துக்களும் அமெரிக்க மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட அதில் நிறம், மதம் என்பன அடிபட்டுப்போக ஒபாமா, அமெரிக்காவின் ஜனாதிபதியாகினார்.

இதை இவ்விடத்தில் கூறியதன் நோக்கம் யாது? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் காரணத்தோடுதான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மாற்றத்தை விரும்பாதவர்களாக இருக்கின்றனர்.

தந்தையின் தொழிலை தனயன் செய்வது, அதில் நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கு விரும்பாமை போன்ற காரணங்களால் அபிவிருத்தி நோக்கிய சமகாலப் பொருளாதாரத்திற்கு நம்மவர்கள் ஈடுகொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இதன் காரணமாக தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் வடபுலத்தில் உள்ள கட்டிடவாக்கம், பாலங்கள் நிர்மாணம், வீதி அமைப்பு போன்றவற்றில் ஈடுபட்டு பெருந்தொகையான வருமானங்களை ஈட்ட, தமிழகத்தைச் சேர்ந்த சிற்ப வல்லுநர்கள் வடபகுதியில் இருக்ககூடிய பிரபல்யமான ஆலயங்களின் நிர்மாணப் பணியில் ஈடுபட்டு கோடிக்கணக்கான ரூபாய்களை வருமானமாக பெற்றுக்கொள்ள, எங்கள் இளைஞர்கள் வேலையில்லாதவர்களாக உள்ளனர்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் போதிய பயிற்சிகளை நாம் பெற்றுக்கொள்ளவில்லை என்பதாகும்.

ஆலய நிர்மாணப் பணிகளில் தமிழகத்தின் தலைசிறந்த சிற்பக் கலைஞர்களிடம் பயிற்சி பெறவேண்டும்.

அதேபோல் மாபிள் பதித்தல், பாரிய கட்டிடங்களை அமைத்தல் போன்றவற்றில் தென்பகுதியில் உள்ள கட்டிட நிர்மாணத்தில் நிபுணத்துவம் உடையவர்களிடம் பயிற்சி பெறவேண்டும்.

இத்தகைய பயிற்சிகளை பெறமுடியாது போனால் எதிர்காலத்தில் தென்பகுதியைச் சேர்ந்தவர்களும், தமிழகத்தைச் சார்ந்தவர்களுமே வட பகுதியில் இடம்பெறக்கூடிய அத்தனை நிர்மாணப் பணிகளிலும் ஈடுபடுவர்.

நிலைமை இதுவாக இருந்தால் இப்போது இங்கு சமாளித்துக் கொண்டிருக்கக்கூடிய சிற்ப நிலையங்கள், கட்டிட ஒப்பந்த அமைப்புகள் யாவும் களத்தில் இருந்து தூக்கி எறியப்படும்.

ஆக, எங்கள் இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டவும் வடபுலத்து பணம் வெளியேறுவதைத் தடுக்கவும் கட்டிடவாக்கம், ஆலய நிர்மாணம் போன்றவற்றில் பயிற்சி பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை அமைப்பு ரீதியாக உருவாக்கி, அதில் இளைஞர்களை இணைத்து, தென் பகுதி, தமிழகம் தேவையாயின் வேறிடங்களுக்கும் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்க வேண்டும்.

இதனைச் செய்யும்போதுதான் நாங்களே எங்கள் வருமானத்தை அனுபவிக்கும் பாக்கியசாலிகளாக மாறமுடியும்.

# தமிழகத்திலுள்ள இல.தமிழர்களுக்கும் நலத்திட்டங்கள் கிடைக்க ஏற்பாடு

தமிழ்நாட்டில் செயற்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என முதலமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார்.

அரசு மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் 21 ஆயிரம் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு சென்று வர சிரமப்படுவதை தவிர்க்க தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளால் நிர்வகிக்கப்பட்டு வரும் அனைத்து மாணவர், மாணவியர் விடுதிகளிலும் அவர் கள் தங்கி கல்வி பயில ஆணையிட்டுள்ளார்.

இதன்படி தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் 1294 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மாணவர், மாணவி யர்களுக்கான விடுதிகளில் ஒவ்வொரு விடுதியிலும் தற்போது அனுமதித்துள்ள எண்ணிக்கைக்கு கூடுதலாக 5 இடங்கள் வீதம் மொத்தம் 6 ஆயிரத்து 470 கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 கோடியே 15 இலட்சத்து 40ஆயிரம் ரூபாய் தொடரும் செலவீனம் ஏற்படும்.

இது போன்று தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் ஆயிரத்து 238 விடுதிகளில் ஒவ்வொரு விடுதியிலும் தற்போது அனுமதித்துள்ள எண்ணிக்கைக்குகூடுதலாக 5 இடங்கள் வீதம் மொத்தம் 6190 இடங்கள் உருவாக்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 4 கோடியே 25 இலட்சத்து 64 ஆயிரத்து 620 ரூபாய் தொடர் செலவீனம் ஏற்படும்.

இந்த நடவடிக்கைகள் மூலம் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் 12 ஆயிரத்து 660 குழந்தைகள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கி படிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர இலங்கைத்தமிழர்கள் தங்கள் படிப்பினைஇடையில் நிற்காமல் தொடர்ந்த படிப்பதனால் அவர்களின் வருங்கால வாழ்விலும் வளம் ஏற்படும். இவ்வாறு தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

திங்கட்கிழமை ஆரம்பமாகும் க.பொ.த (சா/த) பரீட்சையில் யா/அத்தியார் இந்துக் கல்லூரி மண்டப இல 1 பரீட்சை நிலையம் மட்டும் யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்தியார் இந்துக் கல்லூரி மண்டப இலக்கம் 1 இல் தோற்றவுள்ள பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அனைவரும் யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் தோற்றுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (எ)


## கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பதினான்காம் ஆண்டு விழா

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 14ஆம் ஆண்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானாந்தா இந்து இளைஞர் சங்க கலாசாரா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்க லைக் கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் இ.நந்தகுமாரன், வவுனியா கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி, சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலாளர்களான அ.சிவபால சுந்தரன், க.பரந்தாபன், சுத்தானந்தா, இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா.சேனாதிராஜா, வவுனியா இந்து மாமன்றத்தின் செயலாளர் சி.ஏ. இராமசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது கலை நிகழ்வுகளும் நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் அறிமுக நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. அத்துடன் தேகாந்த நிலையில் கவிதை கலைச்செல்வர் விருது அமரர் கவியெழில் கண்ணையாவுக்கும் ஊடகக் கலைச்செல்வர் விருது அமரர் தம்பு விவேகராசாவுக்கும் வழங்கப்படவுள்ளன. (2)

## நேட்டோ படையினருக்கு எதிராக கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்




நேட்டோ படையினருக்கு எதிராக கொழும்பு தெவட்டகஹா முஸ்லிம் பள்ளிவாயில் முன்பாக ஜும்மா தொழுகையின் பின்னர் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இலங்கை-பாகிஸ்தான் நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரான அசாத் சாலி உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்காவுக்கும் நேட்டோ படைகளுக்கும் எதிராக பல்வேறு வாசகங்கள் பொறித்த சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒபாமா ஒழிக! அமெரிக்காவின் கைப் பொம்மையான பான் கீ மூன் ஒழிக! மற்றும் சதாம் ஹுசைன், கடாபி, பாகிஸ்தான் இராணுவம் ஆகியோரை அமெரிக்காவே கொன்றொழித்தது போன்ற கோஷங்களை எழுப்பியவாறு தெவட்டகஹா பள்ளிவாயிலிருந்து லிப்டன் சுற்றுவட்டம் வரை பேரணியாக ஆர்ப்பாட்டம் நகர்ந்தது.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமான இவ்வார்ப்பாட்டமானது சுமார் அரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது. இதனால் அப்பகுதி ஊடான போக்குவரத்து ஓரளவு பாதிக்கப்பட்டிருந்து. (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எண்ணம் முழுவதும் இறைமயம்



கடவுளிடம் எதிர்பார்ப்பு இல்லாமல் அன்பு செலுத்துவதே உயர் பக்தியாகும்.

கடவுளிடம் உரிமையோடு கேட்பது, பண்டமாற்று முறையில் எதிர்பார்ப்புடன் வழிபடுவது விருப்பு வெறுப்பின்றி அவரிடம் சரணடைவது ஆகிய மூன்று வகைகளில் மனிதன் கடவுளிடம் பக்தி செலுத்துகிறான். மூன்றாவது வகையே உயர்ந்தது.

மனதில் ஞானம் உதயமாகி விட்டால் செயல்களின் பலன்களை கடவுளிடமே அர்ப்பணிக்கும் மனநிலை உண்டாகும். ஒரு கணம்கூட அந்நிலையில் இறைவனை மறக்க முடியாது.

அன்றாட பணிகள் ஒவ்வொன்றும் கடவுளாலேயே நடக்கிறது. அவரை நினைத்து உண்ணவும் உறங்கவும் பேசவும் முயற்சியுங்கள். அவரே எல்லாம் என்பதை உணருங்கள்.

கடவுளின் அருளை விட அவருடைய மேலான அடியவர்களின் அருளை பெற முயற்சியுங்கள். அவர்களின்தொடர்புஅவ்வளவுஎளிதில்ஒருவருக்குவாய்த்துவிடுவதில்லை. உண்மையான அடியவரால் ஒருவரது வாழ்வில் போக்கையே மாற்றிட முடியும்.

## மீன்பிடித்தடை யோசனை வாபஸ்

இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த டையை அமுல்படுத்தலாம் என்ற யோசனையைக் கடலோரக்காவற்படை திரும்பப் பெற்றுள்ளது. இந்தப் பிரச்சினை குறித்து முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தின் எதிரொலியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய- இலங்கை கடல் பகுதியில் தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க கோரிய மனுவுக்கு கடலோரக்காவற்படை இணை இயக்குநர் தாக்கல் செய்த பதில் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த மீன்பிடித்தடை ஆலோசனையை திரும்பிப் பெற்றுக்கொள்வதற்காக அவர் நேற்று முன்தினம் மனுதாக்கல் செய்துள்ளார். இணைஇயக்குநர் வி.எஸ். மூர்த்தி தாக்கல் செய்துள்ள மனு விபரம்.

2008 ஆம் ஆண்டு மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் சம்பவத்தையடுத்து, இந்திய-பாகிஸ்தான் கடல் எல்லையில் 5கடல் மைல் தூரம் தடை செய்யப்பட்ட பகுதியாக வும் அப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க தடை விதித்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு அரசியல் இயக்கத்தலைவர்கள்,தமிழக முதல்வர் மற்றும் முன்னாள் முதல்வர் உள்ளிட்டோர் இதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (2)

# முல்லைப்பெரியாறு அணை விடயத்தில் கேரளா, தமிழக, மத்திய அரசுகள் மௌனம்



## கருணாநிதி தெரிவிப்பு


முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் மத்திய மாநில மற்றும் கேரள அரசின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை என்றும் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி கேர்ள அரசு நடந்துகொள்ள மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் உண்ணாவிரதம் மற்றும் மனிதச்சங்கிலி போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அணை விவகாரம் தொடர்பாக விவாதிக்க தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் கட்சி தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் தமிழக,கேரள,மத்திய அரசின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை. மத்திய அரசின் மௌனம் அதிர்ச்சியை தருகிறது என்றும் கேரள அரசை உச்சநீதி மன்ற உத்தரவின்படி செயற்பட அறிவுறுத்த வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மற்றொரு தீர்மானத்தில் நாளை மறுதினம் மாநிலம் தழுவிய உண்ணாவிரத போராட்டமும் எதிர்வரும் 15ஆம் திகதி தேனி, மதுரை,ராமநாதரம்,சிவகங்கை,திண்டுக்கல் மாவட்டங்களில் மனிதச்சங்கிலியும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவே இந்த போராட்டம் என தீர்மானத்தை வாசித்த மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு ஆதரவு வாபஸ் பெறப்படுமா? இல்லை என்கிறார் கருணாநிதி. செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் நிருபர்களிடம் பேசிய கருணாநிதி தமிழக அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதை உறுதிபட தெரிவிக்க வேண்டும். இதற்கு அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டி ஆலோசித்து தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள மற்றும் மத்திய அரசின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை. அதிர்சியளிக்கிறது. தி.மு.க. அறிவித்துள்ள இந்த போராட்டத்திற்கு மது ரையில் அன்பழகன், தேனியில் பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமை வகிக்கின்றனர். மேலும் வரும் போராட்டங்களிலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் என தெரிவித்தார்.

அணை விவகாரம் தொடர்பாக நேற்று கேரள அரசின் சிறப்பு சட்ட சபை கூட்டம் கூடியது. இதில் அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்கவும்,புதிய அணை கட்டவும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தமிழகத்திற்கு அதே அளவு தண்ணீர் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலில் தீபத் திருவிழாவையொட்டி 2ஆயிரத்து 668 அடி உயரமுள்ள மலை மீது நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு மகா தீபம் ஏற்றப்பட்டதை படத்தில் காணலாம்.

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு அவுஸ்திரேலியா ஆதரவு

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்க நிரந்தர இடம் கிடைக்க அவுஸ்திரேலியா ஆதரவு அளிக்கும் என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இந்தியாவில் மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய இராணுவ அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கூறியதாவது, ஐ.நா, பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பதற்கு அவுஸ்திரேலியா ஆதரவு அளிக்கும். இந்தியாவுக்கு யுரேனியம் அளிப்பதற்கு அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல் ரீதியான சிக்கல் தீர்ந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மேலும் பலப்படுவதற்கும் இது உதவும். எதிர்காலத்தில் இரு நாடுகளும் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு ஸ்டீபன் ஸ்மித் கூறினார். (2)

## பாரதச் செய்திகள்

# தனியார் வைத்தியசாலையில் தீ விபத்து தப்பிக்க முடியாமல் பலர் திண்டாட்டம்

(கொல்கத்தா)

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் உள்ள தனியார் வைத்தியசாலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள், தாதிகள், ஊழியர்கள் என பலர் கட்டடத்தில் சிக்கியிருக்கின்றனர். எத்தனைபேர் சிக்கியிருக்கின்றனர் என்ற விபரம் இன்னும் அறியப்படவில்லை. தற்போதைய நிலவரப்படி 60 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கொல்கத்தாவில் தகுரியாவில் உள்ள ஏ.எம்.ஆர்.ஐ வைத்தியசாலையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்த தகவல் அறிந்ததும் 24 தீயணைப்பு வண்டிகள் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. கீழ் அறையில் இருந்த அமோனியா வாயு கசிந்து பின்னர் தீப்பற்றியிருக்கலாம் என்றும் 20 பேர்வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் முதற்கட்ட தகவல் தெரிவித்தது. ஆனால், 60 பேர் வரை இறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

தப்பிக்க முடியாமல் திணறிய நோயாளிகள் வைத்தியசாலையில் தீ பிடித்து புகை கிளம்பிய பின்னர் ஏற்கனவே பலம் இல்லாமல் தளர்ந்த நிலையில் இருந்த நோயாளிகள் தங்களால் ஓடவும் முடியாமல் நகர்ந்து செல்லவும் முடியாமல் திணறியிருக்கின்றனர்.



பல நோயாளிகள் உறங்கிய நிலையில் இறந்துவிட்டனர். இந்த வைத்தியசாலையில் இருந்தவர்கள் பலரும் கிட்னி கோளாறு, வயிறு உபாதை மற்றும் குழந்தைகள், நோயாளிகள் ஆவர். பல நோயாளிகளும் புகை மண்டலத்தில் சிக்கி மூச்சுத் திணறி இறந்திருக்கின்றனர். உடல்களை தீயணைப்பு படையினர் மீட்டு கொண்டிருக்கிறனர்.

**தாமதமாக வந்த தீயணைப்பு படை** காலை 3.30 இற்கு தீ பிடித்திருக்கிறது. ஆனால், தீயணைப்பு படையினர் 4.15 இற்குத்தான் வந்திருக்கின்றனர். தீ எங்கிருந்து பரவுகிறது என்பதை கண்டறிய ஒரு மணி நேரம் பிடித்தது. காலை 7.20 மணி வரை தீ அணைக்கும் பணி நடந்தது. இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

**விசாரணை உத்தரவு** இந்த தீ விபத்து சம்பவம் குறித்து உயர் அதிகாரிகளை கொண்ட குழு விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டிருக்கிறது. வைத்தியசாலை நிர்வாகத்தினர் மீதான குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவர் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பந்தோயாபத்தாய் கூறியிருக்கிறார்.

**கொல்கத்தாவில் அடிக்கடி தீ விபத்து** கடந்த ஆண்டு கொல்கத்தாவில் மாபெரும் நட்சத்திர விடுதி மற்றும் சொப்பிங் மாலில் தீ விபத்து ஏற்பட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரு விடதியில் தீ விபத்து ஏற்பட்டது. தற்போது வைத்தியசாலையில் துயரச்சம்பவம் நடந்திருக்கிறது.

எதிர்காலத்தில் இது போன்று நடக்காத வண்ணம் நகர்ப்புற துறையினர் முக்கிய வீதிகளில் ஆய்வு நடத்துவதுடன் தீ முன்னெச்சரிக்கை விழிப்பு ணர்வு பயிற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

தீ விபத்து ஏற்பட்டுள்ள இந்த வைத்தியசாலையில் சட்ட விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. பாதுகாப்பு விதிகள் எதுவும் முறையாக பின்பற்றப்படவில்லை. இந்த எ.எம். ஆர்.ஐ. வைத்தியசாலையில் தற்போது நடந்திருப்பது 2 ஆவதுதீ விபத்து ஆகும்.

மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி தீ பிடித்த வைத்தியசாலைக்கு சென்றார். அங்கு நடக்கும் மீட்புப்பணிகள் விபரம் குறித்து கேட்டறிந்தார். மேலும் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமுற்ற உறவினர்களுக்கு மம்தா ஆறுதல் கூறினார்.

**நோயாளிகளின் உறவினர்கள் கதறல்**

வைத்தியசாலையில் உயிரிழந்த நோயாளிகளின் உறவினர்கள் பலரும் வைத்தியசாலையை சுற்றிலும் நின்று கதறி அழுதபடி இருக்கின்றனர்.

இது குறித்து ஒரு உறவினர் கூறுகையில், எனது தந்தை விரைவில் குணமாகி வீடு திரும்புவார் என எதிர்பார்த்திருந்த நேரத்தில் இப்படி தீ விபத்தினால் உயிர் போய் விட்டதே. இதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார் கதறியபடி. ஒரு சிலர் ஆத்திரத்தில் வரவேற்பறையில் இருந்த பொருட்களை அடித்து நொருக்கினர்.

இந்நிலையில் பலியானவர்களின் பட்டியல் மற்றும் படுகாயமடைந்தவர்களின் பட்டியலை வழங்காத வைத்தியசாலையை கண்டித்து நோயாளிகளின் உறவினர்கள் கடும் வன்முறையில் ஈடுபட்டனர். மருத்துவ மனையின் வரவேற்பறை அடித்து நொருக்கப்பட்டது. படுகாயமடைந்தவர்களை அவர்களின் உறவினர்களே அருகில் உள்ள மருத்துவ மனைகளில் அனுமதித்து வருகின்றனர். (2)





இலங்கை வங்கியின் ரன்கெக்குளு கணக்கு வைத்திருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌர விக்கும் நிகழ்வில் மாணவி ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் இலங்கை வங்கியின் பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி. சுமண சிறி பரிசில் வழங்குவதை யும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# சர்வதேச மெய்வல்லுநர் பயிற்றுநர் பயிற்சி நெறியில் விசேட சித்தி



(யாழ்ப்பாணம்)

சர்வதேச மெய்வல்லுநர் சம் மேளனத்தின் (IAAF) மெய்வல்லு நர் பயிற்றுநர்களிற்கான தரம் II பயிற்சி நெறியில் வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுநர் கதிர் வேல் விஜிதரன் விசேட சித்தியெய் தியுள்ளதுடன், அகில இலங்கைரீதியில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை மெய்வல்லுநர் சம் மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளன (IAAF) மெய்வல்லுநர் பயிற்றுநர்களிற் கான தரம் II பயிற்றுநர் பயிற்சி நெறி கடந்த மாதம் 20ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 4ஆம் திகதி வரைதியகமமகிந்தராஜபக்ஷசர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கடந்த 2009/2010 வருடங் களில் நடைபெற்ற சர்வதேச மெய் வ்ல்லுநர் சம்மேளன பயிற்றுநர் பயிற்சி நெறி தரம் I இல் அதிவிசேட சித்திபெற்று, சிறந்த களப்பெறுதி களையும் வெளிக்காட்டிய மெய்வல் லுநர் துறைசார்ந்த பயிற்றுநர்களில் இருந்து 24 மெய்வல்லுநர் துறை சார்ந்த பயிற்றுநர்களை இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனம் தரம் II பயிற்றுநர் பயிற்சிநெறிக்காக தெரிவு செய்திருந்தது.

இதேவேளை தரம் II மெய்வல் லுநர் பயிற்சி நெறியின் செய்முறை மற்றும் எழுத்துப் பரீட்சை ஆகிய இரண்டிலும் விசேட சித்திபெற்றதன் மூலம் சர்வதேச மெய்வல்லுநர் சம் மேளனத்தின் ஆசிய பிராந்தியத் திற்கான மெய்வல்லுநர் பயிற்று நர் துறைசார்ந்த அபிவிருத்தி நிலையமான இந்தோனேசியா வின் ஜகார்த்தாவில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெற வுள்ள தரம் III பயிற்றுநர் பயிற்சி நெறிக்கு க.விஜிதரன் நேரடியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப் பிடத்தக்கது. (ஏ)

# 12ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரம் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

வீதியகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங் களை இடமாற்றம் செய்யவேண்டி யிருப்பதால் வரும் 12ம் திகதி திங்கட் கிழமை, 14ம் திகதி புதன்கிழமை மற் றும் 17ம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை8.30 மணியி லிருந்து மாலை 5.00மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப் பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவப்பீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் சாரம் தடைப்படும்.

அதேபோன்று 12ம் திகதி திங் கட்கிழமை, 14ம் திகதி புதன்கிழமை மற்றும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை உரும்பிராய், ஊரெழு பிரதே சத்தின்ஒருபகுதி ஆகிய இடங்களிலும்,

13ம் திகதி செவ்வாய்க்கிழமை, 15ம் திகதி வியாழக்கிழமை மற்றும் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு,ஏழாலை ,காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி , இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

16ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந் துறை, மீனாட்சிப்புரம், காக்கை தீவு, உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# இலங்கையின் அபிவிரு...

ஒத்துழைப்பானது வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

2009ல் தமிழீழ விடுதலைப் புலிகள் என அறியப்படும் கெரில்லா அமைப்பு தோற்றகடிக் கப்பட்ட பின்னர், இலங்கை அரசாங்கம் யுத்தத்திற்குப் பின்னரான பாரியள விலான மீள்கட்டமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

சீனாவானது இலங்கையின்பொரு ளாதர அபிவிருத்தித்திட்டத்திற்காகதனது உதவிகளை வழங்கியுள்ளது. இத்திட் டங்களின் ஊடாக இலங்கையர்கள் கணிசமானளவு நலன்களைப் பெற் றுள்ளனர்.எனஊடகவியலாளர்களுட னான நேர்காணலில் பீரிஸ் தெரிவித் துள்ளார்.

சீனாவானது இலங்கையின் துறைமுக மற்றும் கப்பற் துறைக் கான துரித அபிவிருத்தியில் குறிப் பிடத்தக்க பல உதவிகளை வழங் கியுள்ளதாக இலங்கையில் உள்ள அனைத்து வர்த்தகத் துறைமுகங் களையும் அபிவிருத்திசெய்துபராமரிப் பதற்குப் பொறுப்பான துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரியத் விக்கிரம தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையானது அம் பாந் தோட்டைத் துறைமுகத்தைக் கட்டுவதற்காக சீனாவின் சலுகை அடிப்படையிலான கடன் திட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றது. இத் துறை முக அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டம் பூர்த்தியடைந்துள்ளது.

இத்துறை முகத்திற்கான அனை த்து வேலைகளும் பூர்த்தியடைந்த பின்னர் இது தென்னாசியாவின் மிகப் பெரிய துறைமுகமாக விளங் கும். (எ-5)

# யாழ்ப்பாணக் குடா...

தளங்கள், பொது இடங்கள், நுளம்பு கள் பெருகக் கூடிய நீர் தேங்கக் கூடிய இடங்கள்துப்புரவு செய்யப்படாமலுள் ளன.

கார்த்திகை மாதத்தில் யாழ் மாவட்டத்தில் பொதுச் சுகாதார பகுதியினரால் பரிசோதிக்கப்பட்ட 9 ஆயிரத்து 501 வீடுகளில், நுளம்பு கள் பெருகக்கூடிய இடங்கள் உள்ள ஆயிரத்து 461 வீடுகள் இனங்காணப் பட்டு சுத்திகரிக்கப்பட்டது. சுத்திகரிக் கப்படாத 36 வீடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே மீண்டும் டெங்கு நோய் எமது பிரதேசத்தில் பெருமளவில் பரவி இறப்புக்கள் ஏற்படுத்தாமல் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

எமது வீடு, அலுவலகங்கள், வேலைத்தளங்கள், கோயில்கள், பொது இடங்கள், போன்றவற்றில் தினமும் டெங்கு நுளம்புகள் பெரு கக் கூடிய நீர்த் தொட்டிகள், நீர்த் தாங்கிகள், உடைந்த மலக்குழி, வெற்று பாத்திரங்கள், சிரட்டை, கோப்பைகள், பேணிகள், போத்தல் கள், கோம்பைகள், ரயர், பொலித்தீன் பைகள், மூடிகள் போன்ற இடங்களை இல்லாமல் செய்வது அல்லது சீர் செய்வது மிகவும் இலகுவான தடுப்பு முறையாகும்.

டெங்கு நோய் பரவாது கட்டுப் படுத்த அனைவரும் பொறுப்பை யுணர்ந்து செயற்பட யாழ். பிராந் திய தொற்றுநோய்த்தடுப்புப்பிரிவு கேட்டுக் கொள்கிறது என்றுள்ளது. (ஏ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து

# கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகப் பயன்படுத்து வதற்கு வான் (Van) ஒன்றின் சேவை 03.01.2012 இல் இருந்து 31.12.2012 வரை, அந்த வாகனத்துக்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன், கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக் கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கோரப்படுகின்றது.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாகனமானது பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும்.

01.வாகனம் 1997ம் ஆண்டிற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
02. இருபொறிமுறைக் குளிரூட்டி (Dual Air Conditioning)
03. போதிய இடவசதியுடனான வசதியான இருக்கை ஒழுங்கமைப்பு (Comfortable seating arrangements with adequate space for legs)
04. மாற்றியமைக்கக் கூடிய இருக்கைகள் (Adjustable seats)

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2011.12.23 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். கடித உறை யின் இடதுபுற மேல் மூலையில் "**வான் ஒன்றை வாடகைக்கு வழங்குதல்**" என்று குறிப்பிடல் வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த கால வரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப்பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக்கிளை யில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக் கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்
09.12.2011

(சி-5146)



வாழும் கலை

பிள்ளையார்
துணைகொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம்;
இடர்கள் நீங்கி மகிழ்ச்சிபெற

**யாழ்.மக்களுக்கு ஓர் அரிய தரிசனம்**

பிள்ளையார் கதையை முன்னிட்டு
**வாழும் கலை அமைப்பின் சார்பாக**
**யாழ்.மண்ணில் முதன்முறையாக**
**25 அடி உயர மகா கணபதி உருவச்சிலை**
யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில்
அமைக்கப்பட்டுள்ளது.

உலக அமைதி வேண்டி மகா கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு பூஜைகள் தினமும் இடம்பெறவுள்ளன. இந்த ஆன்மீக வைபவத்தில் அனைத்து மக்களும் தவறாது கலந்து அருள்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

11.12.2011 ஞாயிறுக்கிழமை கணபதி ஹோமம் காலை
6.00 மணி - 7.30 மணி

காலம்: டிசம்பர் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
முதல் ஜனவரி 09-ம் திகதி திங்கட்கிழமைவரை
இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ்.இந்துக்கல்லூரி
நேரம்: காலை 8.00 மணி முதல் 8.45 மணிவரை
மாலை 6.00 மணி முதல் 7.00 மணிவரை

சங்கல்ப பூஜை செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 0777740593, 0770474757

(இ)



யாழ் FM, அலை FM, வலம்புரி, தினக்குரல், தினமுரசு
JAFFNA TODAY Day சகரம் Thesam Net
ஆகிய ஊடகங்களில் நேரடிப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடனான

**ஊடகப் பயிற்சிநெறி**

(கற்கைநெறி விளக்கம் மற்றும் தொழில் வழிகாட்டி)

**வழங்குவோர்**

எஸ்.குகநாதன், பணிப்பாளர், டான் தொலைக்காட்சி
கோ.றுஷாங்கன், பணிப்பாளர், சிகரம் ஊடக இல்லம்
பூ.சீவகன், லண்டன் பி.பி.சி. தமிழோசை
மற்றும்
க.வேல்தஞ்சன் (வேல்), கு.பதிதரன் (குரு)

காலம்: 11.12.2011 ஞாயிறு பி.ப. 1.30 மணி

குறிப்பு:- இதுவரை கடிதம் கிடைக்காதவர்களும்
ஆர்வமுள்ளவர்களும் கலந்துகொள்ளலாம்

சிகரம் ஊடக இல்லம்
MEDIA
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
பதிவுகளுக்கு - 021 300 80 60



Hatton National Bank
Hatton National Bank plc (PQ82)

**அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.10.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 17.12.2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் ,கடனின் ஒரு பகுதியையும்(ரூ.1000) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி

(சி-5148)


## 2,200 ...

தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தை அண்டிய பகுதியில் சுடுமண்ணில் செய்யப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் சிலவற்றை அப்பகுதி மக்கள் கண்டெடுத்துள்ளதாக அரசாங்க அதிபரினால் கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அப்பகுதிக்கு நாம் சென்றிருந்தோம்.

இற்றைக்கு 2 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் செய்யப்பட்டவையாக இருக்கலாம். எனினும் 11 ஆம் 12ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த மக்களினால். பயன்படுத் தப்பட்டிருக்கலாம் எனக் கருதக் கூடிய பெண்ணின் உருவத்தை ஒத்த சிறிய சுடுமண் சிலைகள், அவற்றின் உடல் அங்கங்கள் குறிப் பாக தலைப்பகுதி, ஆணின் உருவச் சிலைகள், மிருகங்களின் உருவச் சிலைகள், அவற்றின் சுடும் மண் சிற்பங்கள், உடல் அங்கங்கள், மட்பாண்டங்கள் எனப் பலவற்றை மீட்டிருந்தோம்.

மிகத் தொன்மையான காலப் பகுதியில் இருந்து இங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இங்கு மீட்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் வெளிப்படுத்துகின்றன.

அத்தோடு இந்த கூழாங்குளம் ஆரம்ப காலத்தில் சிறிய குளமாக இருந்திருக்கலாம் எனவும் காலப் போக்கில் மக்களின் தேவைகளின் பொருட்டு அக்குளம் பெரிதுபடுத் தப்பட்டிருக்கலாம் எனவும் கருதப் படுகின்றது.

மீட்கப்பட்டுள்ள பொருட்களும் இதனை நன்கு உறுதிப்படுத்துவ தாக அமைந்துள்ளது.

மேலும் இற்றைக்கு 2ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என இந்தப் பகுதியில் மீட்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளை கூறுவதற்கும் காரணம் உண்டு.

கந்தரோடை,- அனுராதபுரம், ஆனைக்கோட்டை, தென்னிந்தியாவிலுள்ள கொடுமணல், பொற்கை, அழகன்குளம் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே மீட்கப்பட்ட பொருட்களுடன் இவை ஒத்துப்போகின்றன.

மேலும் பெண் உருவச் சிற்பங்கள் ஆரம்ப காலத்தில் இருந்த தாய்த் தெய்வ வழிபாட்டை வெளிப் படுத்துவதாகவும் அக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டவர்களாகவும் செல்வச்செழிப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதையும் வெளிப் படுத்துகின்றது.

கூழாங்குளம் பகுதியில் மேலும் பல வரலாற்றுச்சின்னங்கள் கிடைக்கப்பெறும் வாய்ப்பு உள்ளது. இது தொடர்பாக தொல்லியல் திணைக் களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

## உள்ளூரா...

வதற்கு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## சுமார் 30...

ஆயிரத்து 711 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 421 பேர் நலன்புரி நிலையங்களில் வசித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-5)

## தடுத்து...

அனுசரணையுடன் இவர்கள் இருவரும் படைத்தரப்பினரிடம் சரணடைந்துள்ள போதிலும், இவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை எவருக்கும் தெரியவில்லை.

இவர்கள் இருவரும் எங்கே உள்ளனர் என அறிவிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை கோருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது விடுதலைப்புலிகளின் 12 ஆயிரம் போராளிகள் படைத்தரப்பினரிடம் சரணடைந்திருந்ததாக அரசாங்கம் கூறியிருந்தது. இந்நிலையில் இப் போராளிகளின் பெற்றோரும், உறுப்பினர்களும் தடுத்துவைக்கப் பட்டவர்கள் எங்கே உள்ளனர் என அறிய ஆவலாக உள்ளனர்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் தாக்குதல் பிரிவுடன் நேரடியாக இணைந்து செயற்பட்ட கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் ஆடம்பர வாழ்வு வாழ்ந்து வருவதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்பகுதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் ஆபத்தான நிலையில் உள்ளனர். இவர்கள் மீது அண்மையில் தாக்குதல் மேற்கொள்ளப் பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களை வடபகுதி சிறைச் சாலைக்கு மாற்ற வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்: அதே வேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு மனிதாபிமான அடிப்படையில் மன்னிப்பு வழங்குவது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார். (எ-5)

## பிக்குகள்...

நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இது பற்றிய வழக்கு விசாரணைகள் தொடர்பான அறிக்கையினை கொழும்பு நீதவான் சட்டமா அதிபருக்கு அனுப்பியிருந்தார். இவ்வழக்குத் தொடர்பான விசாரணை அடுத்து வருடம் ஏப்ரல் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## மீளக் குடி...

யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் நிலக்கண்ணிகள் இருப்பதன் காரணமாக அங்க செல்ல் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை என்று அரசாங்கம் கூறுகின்றது.

இந்தப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை என்பது இன்னமும் ஒரு மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கிறது.

ஆட்கள் செல்வதற்கு இதுவரை அனுமதிக்கப்படாத பகுதிகளின் எல்லைகள்வரை செல்வதற்கு சோஷசலிச யூரோ நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த பகுதிகளில்தான் போர்க் காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் மீது விடுதலைப்புலிகளுடன் போரிட்ட இலங்கை அரசாங்க படைகளின் குண்டுதாக்குதலும் நடத்தப்பட நேர்ந்ததாக கூறப்பட்டிருந்தது.

போரில் பாதிக்கப்பட்ட மக்கள் இப்போதைக்கு அந்தப் பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரியவில்லை. அந்தப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் எல்லாம் ஒருவிதமான அச்ச உணர்வு மக்கள் மத்தியில் காணப்படுகிறது என அங்கு சென்று வந்த, அந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற றிச்சர்ட் ஹொவிட் தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்தப் பகுதிகளில் சில இடங்களில் நிலக்கண்ணிகள் இருப்பதனாலேயே மக்கள் இன்னமும் அங்கு அனுமதிக்கப்படவில்லை என்றும், அங்கு சடலங்களோ அல்லது வேறு எதுவுமோ கிடையாது என்றும் பாதுகாப்புத்துறை பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.


ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து குறித்து மிகுந்த ஆச்சரியம் வெளியிட்டுள்ள ரம்புக்வெல, இதுவரை காலமும் போருக்கு பின்னர் எவரும் நிலக்கண்ணிகளால் இறக்கவில்லையென்றும், அங்கு மக்களை அனுப்புவது ஆபத்து என்றும் கூறினார்.

அப்பகுதிகளில் வாழ்ந்த் மக்களுக்கு அரசாங்கம் வேறு புதிய கிராமங்களை உருவாக்கியுள்ளது. ஆனால் கடலில் இருந்து இந்தப் புதிய இடம் மிகவும் தொலைவில் இருப்பதாக மக்கள் கூறுகிறார்கள்.

இராணுவம் பொதுவாக நன்றாக நடக்கின்றபோதிலும், வடக்கில் அவர்கள் அளவிற்கதிகமாக இருக்கிறார்கள் என்றும் றிச்சட் ஹொவிட் கூறியுள்ளார். (எ-5)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை மகேசன்



அம்பன், குடத்தனையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகேசன் (கைதடி சாந்தி நிலைய சாரதி) 09.12.2011 அன்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (10.12.2011) பகல் 12 மணியளவில் நடைபெற்று அம்பன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பன்
குடத்தனை.

(சி-5147)

தகவல்:
மனைவி, உறவினர்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.